71

THE QUEEN

V56, 1y7M07
M72
2253

V56,147M04
N178

To

The Right Hon'ble The Lady Napier and Ettrick,

AS A GRATEFUL ACKNOWLEDGMENT

OF THE WARM INTEREST WHICH HER LADYSHIP EVINCED

IN THE EDUCATION AND ENLIGHTENMENT

OF HINDU FEMALES IN MADRAS,

THIS LITTLE VOLUME

IS RESPECTFULLY INSCRIBED BY

THE AUTHORESS.

PREFACE.

THIS little book has been written to supply a want. There is no book sufficiently simple, attractive, and wholesome which may be put into the hands of young Hindu women when they leave our schools. All right minded Hindu gentlemen very properly object to females reading the various stories which form the staple literature of the country. In my intercourse with educated Hindu females, I find that many of them, owing to a want of some suitable books to read, spend all their leisure in idle talk and slumber. I therefore venture to write for them, in my own humble way, short and entertaining narratives of the lives of illustrious persons.

I have been induced to give them first this brief account of her gracious Majesty's life, because it furnishes a complete reply to all the objections which are generally raised against Female Education in this land, and at the same time presents a living model for the imitation of all educated women. In the absence of a connected narrative, in English, of her gracious Majesty's life, I have been obliged to collect all my information from various newspapers and periodicals. This sketch is, therefore, necessarily imperfect, and calls for much indulgence. Such as it is, I trust it will not fail to interest and draw forth the admiration and affection of all loyal subjects of our gracious Queen.

T. B.

Free Church Mission House,
December 1872.

GOD SAVE THE QUEEN.

தே செல்வி கா.

1. தே செல்வியைக் காக்க
சீரார் செல்வி வாழ்க
தே செல்வி கா.

ஆசறு வெற்றியும்
அலகில் செல்வமும்
ஆர்ந்தெமையாளவும்
தே செல்வி கா.

2. தந்தை நீரெழுந்து
சத்திரு கடிந்து
நீறுக்கவே.

எந்தா யன்னோர் தந்த்ராம்
இரித்தா ளெம் முள்ளம்
யாம் செல்விபால் சேர்த்தும்
தே செல்வி கா.

3. ஈறில் வரஞ் செல்விக்
கீபு முள்ளிரங்கி
ஆண்டிடவே

மாறில் நீதியோடிம்
மாதலம் ஆள யாம்
மகிழ்ந்தேத்துதற்கும்
தே செல்வி கா.

இராணியார்.

இந்தச் சீர்மேவு சென்னமாநகரிலும், இதைச் சேர்ந்த பல ஜில்லாக்களிலும் கல்விகற்றுவருகிற எனது சுதேசச் சகோதரிகளுக்கு உபயோகமாக யூரோப்புக் கண்டத்திலும், அமெரிக்காக் கண்டத்திலும் சிறப்புற்று விளங்கிய ஸ்திரீரத்னங்களுடைய சரித்திரங்களை ஒருவாறு சங்கிரகித்து எழுதவேண்டுமென்று ஆரம்பிக்கையில், தெய்வபக்தியினாலும், ஜீவகாருணியத்தினாலும், சச்சனசகவாசத்தினாலும், கல்வி மிகுதியினாலும், பொறுமை முதலிய திவ்வியகுண பூஷணங்களினாலும், இவ்வுலகத்திலுள்ள மங்கையர்க்கு அரசியாக விளங்கிவருகிற நமது காருணிய இராணியாரவர்கள் சரித்திரத்தைச் சொல்லுவது அழகாகவும், யாவருக்கும் பிரயோசனகரமாகவும் இருக்குமெனக்கருதி, அதனை முதலில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பிரிட்டிஷ் இராச்சியம்.

நமது தேசத்திற்கு வடமேற்கில் யூரோப்பு என்றொரு கண்டமிருக்கிறது. அந்தக் கண்டத்திற்கு வடமேற்கிலுள்ள அட்லான்டிக்கு மகாசமுத்திரத்திற்கும், ஜர்மானிய கடலுக்கும் இடையில் கிரேட்பிரிட்டன் அயர்லண்டு என்னும் தீவுகள் இரண்டுண்டு. அவ்விரண்டையும் சேர்த்து யூனைடெட் கிங்டம் ஆப் கிரேட் பிரிட்டன் அன்ட் அயர்லண்டு என்று சொல்லுவார்கள்.

இராணியார்.

இந்த இராச்சியம் விஸ்தீர்ணத்தில் நமது சென்னை ராஜதானியிலும் கொஞ்சம் சிறிது. நீர்வள நிலவளங்களிலும் அவ்வளவாகச் சிறந்ததுமல்ல. அப்படியிருந்தும், இதன் குடிகள் மிகுந்த விவேகமும், ஊக்கமும், விடாமுயற்சியும், தைரியமும், நேர்மையும் உள்ளவர்களா யிருப்பதினால், தங்கள் தேசத்தைப் பல விதத்திலும் பண்படுத்தி, அதற்குண்டாயிருந்த இயற்கைச் சாதனங்களையெல்லாம் வெகுவாய் விர்த்திசெய்து, தொலைதூரத்திலுள்ள அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்ட்ரேலியா, பாலினேஷியா என்னும் கண்டங்களுக்கும், தீவாந்தரங்களுக்கும், சென்று, அங்கங்கே நீர்வளம் நிலவளம் பொருந்திய தேசங்களையும், பொன் வெள்ளி கனிகளையுடைய தேசங்களையும், வர்த்தகவளமுள்ள தேசங்களையும் தங்கள் இராச்சியத்தோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்தப் பிரிட்டிஷ் இராச்சியத்திற்கு உட்பட்டிருக்கிற பூமி பூர்வம் இவர்களுக்கு இருந்ததற்கு நாற்பத்தாறு மடங்கு அதிகமாயும், யூரோப்புக் கண்டத்தைப் பார்க்கிலும் ஒன்றரை மடங்கு பெரிதாயுமிருக்கின்றது. இந்த இராச்சியத்தின் ஜனத்தொகை இருபதுகோடி. ராணுவ பலத்திலும், வர்த்தகச் சிறப்பிலும் இந்த இராச்சியத்திற்கு நிகரான இராச்சியம் வேறொன்றில்லை. இப்பூமண்டலத்தின் திசைகள்தோறும் இந்த இராச்சியத்தின் கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றமையால், இந்த இராச்சியத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதில்லையென்னும் பெருமையும் இதற்குண்டாயிருக்கின்றது.

வம்சம்.

இந்த இராச்சியத்தைக் கிறிஸ்துவுக்குமுன் 55-வது வருஷத்திலிருந்து கிறிஸ்துவுக்குப்பின் 1714-வது வருஷம்வரையில் பற

பிரன்ஸ்விக் குடும்பம்.



பல ராஜகுடும்பத்தார் ஆண்டுகொண்டுவந்தார்கள். ஸ்டியூ அர்ட் வம்சாதிபதியாகிய முதலாம் ஜேம்ஸ் என்னும் ராஜனுடைய ஆண்சந்ததி அற்றுப்போனதினால், அவர் குமாரத்தியாகிய எலிச பெத் என்பவர் சந்ததியில் பிறந்த முதலாம் ஜார்ஜ் என்னும் ராஜ குமாரன் 1714-ம் வருஷத்தில் இந்த இராச்சியபட்டாபிஷேகம் பெற்று அரசு புரிந்தார். இவருடைய குடும்பத்தை ப்ரன்ஸ்விக் குடும்பமென்பார்கள். இந்தக் குடும்பத்தார் பட்டத்துக்கு வந்து இப்பொழுது 158 வருஷங்களாகின்றன. இந்தக் குடும்பத்தில் இப்பொழுது நடந்துவருகிறது ஆறுவது பட்டம். நான்கா வது பட்டத்தைத் தரித்திருந்த நாலாம் ஜார்ஜ் என்னும் அரச னுடைய குமாரத்தியும், ப்ரன்ஸ்விக் குலதிலகம் என்று யாவரா லும் மதிக்கப்பட்டிருந்தவருமாகிய ஷார்லெட் என்னும் ராஜ குமாரத்தி பிரஸவவேதனையைப் பொறுக்கமாட்டாமல் இறந்து போனமையால், அவர் தகப்பனருக்குப் பிறகு, அவர் சிறிய தகப் பனாராகிய டியூக் ஆப் க்ளாரன்ஸ் என்பவருக்குப் பட்டாபிஷே கஞ் செய்யப்பட்டது. அவர் பட்டத்திற்கு வந்தபிறகு அவரை நான்காவது உல்லியம் என்று சொல்லுவார்கள். ஷார்லெட், எலிசபெத் என்னும் அவருடைய இரண்டு புத்திரிகளும் அதிக பாலியத்திலேயே இறந்துபோனமையால், அவருக்கு நேர் இளை யவராகிய எட்வர்ட் டியூக் ஆப் கெண்ட் என்பவருக்குப் பட் டம் வரவேண்டியது கிரமமாயிருந்தது. இவரும் மேற்படி நான் காவது உல்லியமென்னும் அரசனுடைய ஜீவகாலத்திலேயே இற ந்துபோனமையால், இவருடைய ஏகபுத்திரியும், நம்முடைய கா ருணிய இராணியாருமாகிய மண்டலேசுவரிக்குப் புகழ்பெற் றோங்கும் பிரிட்டிஷ் இராச்சிய பட்டம் கிடைத்தது. இவர்க ளது பரம்பரை நன்குவிளங்கும் பொருட்டு இவர்களது வம்சா வளியை இதற்கடுத்த பக்கத்தில் வரைந்து இருக்கின்றேன்.

ஜனனம்.

பிரிட்டிஷ் இராச்சியத்தில் அரசுபுரிந்த நான்காவது ஜார்ஜ், நான்காவது உல்லியம் என்னும் ராஜாக்களுடைய இளைய சகோதரரும், அவர்களுக்குப் பிறகு அவர்கள் பட்டத்துக்குரியவருமாயிருந்த டியூக் ஆப் கெண்ட் என்பவர் டியூக் ஆப் ஸாக்ஸ் கோபர்க் என்னும் இறைமகனுடைய சுபுத்திரியாகிய மேரி லூயிஸா விக்டோரியா என்பவரை கோபர்க் நாட்டில் 1818-ம் வருஷம் மேமீ விவாகஞ் செய்துகொண்டார். அவர்களுக்கு நம்முடைய இறைவியாகிய அலெக்ஸான்டரினு விக்ட்டோரியா அவர்கள் 1819-ம் வருஷம் மேமீ 24வ கென்ஸிங்டன் மாளிகையில் பிறந்தார்கள். இவர்கள் பிறந்தபொழுது இவர்கள் பட்டத்துக்குரியவர்களாவார்கள் என்று ஒருவரும் எண்ணினதேயில்லை. ஆகையால் பட்டத்துக்குப் பிள்ளைகள் பிறக்கும்போது ராஜகுடும்பங்களில் நடக்கிற வைபவங்களொன்றும் இவர்கள் பிறந்தபோது நடக்கவில்லை. இவர்கள் பிறந்த ஏழு எட்டு மாதங்களுக்குள்ளாக இவர்களுடைய பிதாவாகிய டியூக் ஆப் கெண்ட் இறந்து போய்விட்டார். அதுமுதல் இந்த ராஜபுத்திரி இவர்களுடைய தாயார் விசாரணையில்தானே இருந்தார்கள். ஒருநாள் இந்தக் குழந்தை தாதியின் மடியில் படுத்து நித்திரை செய்துகொண்டிருக்கையில், அரண்மனைக் கருகாமையில் குருவிவேட்டையாடிக்கொண்டிருந்த வாலிபன் ஒருவன் சுட்ட துபாக்கியின் ரவைகள் இவர்களிருந்த அறையின் சாளரத்தில் பட்டுருவி இவர்கள் தலைக்குச் சமீபமாய்ப்போய் விழுந்தன. இவர்கள் அன்று அந்தச் சிறு குண்டுகளுக்குத் தப்பிப் பிழைத்தது தேவ கடாக்ஷமேயன்றி வேறல்ல. இவர்களது குழந்தைப் பருவத்தில் நேரிட்ட சம்பவங்களில் இது ஒன்றுதான் முக்கியமானது.

பாலியம்.

இவர்களும் இவர்கள் தாயாரும் கென்ஸிங்டன் மாளிகையில் ஏழு எட்டு வருஷகாலம் வாசம் பண்ணிக்கொண்டிருந்தபோதிலும், இவர்கள் அங்கிருக்கிறதாக அவ்வூராருக்குத் தெரியாமலே இருந்தது. இவர்களுடைய தாயார் குணவதியாகையால், அவ்வளவு அடக்கமாய் ஜீவித்துக்கொண்டுவந்ததுமல்லாமல், தன் குமாரத்தியையும் வெகு ஜாக்கிரதையோடு படிப்பித்துக்கொண்டுவந்தார்கள். இந்த ராஜபுத்திரிக்கு எட்டுவயதான பிறகு, தாயும் பெண்ணுமாய்க் காற்று சௌக்கியத்திற்காகச் சாயங்காலங்களில் ராம்ஸ்கேட், டன்பிரிட்ஜ் வெல்ஸ் என்னும் இடங்களில் சிறிது தூரம் சவாரிபோய் வருவார்கள். அப்பொழுதும் இந்த ராஜகன்னிகை பட்டத்துக்குரியவர்கள் ஆவார்கள் என்னும் தோற்றம் ஒருவருக்கும் இல்லாமலே இருந்தது. 1826-ம் வருஷம் டன்பிரிட்ஜ் வெல்ஸில் இருந்த சிலர் இவர்கள் பட்டத்திற்குரியவர்கள் ஆவார்களென்று முதல் முதல் நினைத்து, அவ்விடத்தில் செய்யப்பட்ட மேஜையொன்றை வெகு உற்சாகத்தோடு இவர்களுக்குக் கொடுத்தார்கள்.

இந்தக்காலத்துச் சிறுவியர்கள் எதனை யணிவோம், எதனை உடுப்போம் என்று அலைகிறதுபோல் அலையாமல், இந்த ராஜபுத்திரி சுத்தமான வஸ்திரங்களை யணிந்து, வெகு தாழ்மையாக நடந்தொழுகப் பயின்று வந்தார்கள். ராம்ஸ்கேட் என்னுமிடத்தில் இவர்கள் தமது பீட்டனில் ஏறிச் சவாரி போகையில், இவர்களைப் பார்த்த பலர் இவர்களுக்கு ரதசாரத்தியம் செய்துகொண்டு போன வாலிபன் தரித்துக்கொண்டிருந்த ஆடையாபரணங்களின் வேடிக்கையைப் பார்த்தார்களேயன்றி, இவர்களையே நேராகப் பார்த்தவர்களும் கவனித்தவர்களுமல்ல. சில சமயங்களில் இந்த

ராஜபுத்திரி பட்டணத்திற்குள் நுழைந்து வெகுதூரம் கால் நடையாகப்போய்வருவது முண்டு. அப்படிப்போகையில் ஒருநாள் சிறுவனொருவன் வீடுகள்தோறும் போய், தளங்கள்மேல் ஏறி, புகைப் புரைகளைப் பெருக்கிச் சுத்திசெய்துகொண்டு போகிறதைப்பார்த்து, கொஞ்சம் பிசகினல் அவனுக்கு அபாயம் நேரிடும் என்றுணர்ந்து, மிகவும் மனமிரங்கி, ஒன்றேகால் ரூபாய் பெறுமான வெள்ளிநாணயம் ஒன்று அவனுக்குக் கொடுத்தார்கள். அந்தவாலிபன் சந்தோஷத்தினுலே மெய்ம்மறந்து நின்றதையும், ஒட்டடையினுல் கறுப்பேறியிருந்த அவன் கரத்துக்கும், அதில் வைத்திருந்த வெள்ளி நாணயத்துக்கு மிருந்த தாரதம்மியத்தையும், அவனுக்கருகாமையிலிருந்த உபகாரியின் முகமலர்ச்சியையும் விளக்கப் படமொன்றெழுதியிருப்பார்களானுல், அந்தக் காக்ஷி வெகுவிநோதமாகவே இருந்திருக்கும். ஆகிலும், இந்த வேடிக்கை நடந்தபோது, பெரும்பாலார் பார்த்திரார்கள். தங்களிருப்பிடத்தில் எப்படியோ அப்படியே தாயும் பெண்ணும் ஜலசௌக்கியத்திற்காகவும், காற்று சௌக்கியத்திற்காகவும் போயிருந்த இடங்கள்தோறும் வெகு அமரிக்கையாக நடந்துகொள்வது இவர்களுக்கியல்பாதலால், இவர்கள் பிறர் கண்களுக்குத் தென்படுவது அரிது.

பார்லமென்டென்னும் பிரிட்டிஷ் இராச்சியத்தின் மகாசபையார் இந்த ராஜபுத்திரியின் மனவர்த்தனச் செலவுக்காகப் போதுமானதிரவியத்தைக் கொடுக்கும்படித் தீர்மானித்தார்கள். இந்தத் திரவியத்தை வீண் ஆடம்பரங்களில் செலவிடுவார்கள் என்று பலர் கருதியிருந்தார்கள். திரண்ட தனம் கையிலிருந்தும் இவர்கள் தமக்கியல்பான அமைதலையும் அடக்கத்தையும் கைவிடவில்லை. இவர்கள் ஒருமுறை ராம்ஸ்கேட் என்னும் இடத்திற்கு ஜலசௌக்கியத்திற்காக வரப்போகிறுர்களென்று அவ்விடத்திலிருந்த வர்த்தகர்களும் உத்தியோகஸ்தர்களும் அறிந்து, இவர்கள்

வரும்போது ராஜாக்களுக்குச் செய்கிற மரியாதையைச் செய்ய வேண்டுமென்று கருதி, இவர்கள் வரும் மார்க்கத்தில் வெகு பிரயாசப்பட்டுத் தோரணங்கள் முதலானவைகளைக் கட்டி அலங் காரஞ்செய்து காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் அந்த வைபவங்களுக்குச் சிறிதும் இணங்காமல், வேறொரு மார் க்கமாய்ப்போய்ச் சாதாரண குடிகளைப்போல இவர்கள் இறங்கி யிருக்கத் தீர்மானித்த இடத்திலிறங்கி, தங்களைக் கனஞ்செய்யும் படியாக அந்த இடத்திலிருந்தவர்கள் எடுத்துக்கொண்ட பிர யாசத்தின் நிமித்தமும், தனவிரயத்தின் நிமித்தமும் அவர்க ளுக்கு அனந்த வந்தனஞ் சொல்லி, இவ்வித ஆடம்பரங்களில் தமக்குப் பிரீதி இல்லையென்று அறிவித்து, அன்று அவர்கள் செய்ய எத்தனித்திருந்த பல வேடிக்கைகளையும் தடுத்துவிட் டார்கள்.

இந்த ராஜபுத்திரியைப் படிப்பிக்கும் பொருட்டு டியூக் ஆப் நார்த்தம்பர்லண்ட் என்னும் சீமானுடைய பத்தினியை உபாத்தி யாயியாக நியமித்திருந்தது. இந்த அம்மாள் ஏட்டிலெழுதியிரு ந்ததைமாத்திரம் சொல்லிக்கொடுத்து விட்டுவிடாமல், படித்த அளவு உணரவும், உணர்ந்த அளவு நடக்கவும் பயிற்றுவித்தார் கள். தேவர்னுக்கிரகத்தினால் எல்லாச்சம்பத்தும் உண்டாயிரு ந்தபோதிலும், அதைச் சதமென்றெண்ணி மயங்கலாகாதென்று பலவிதத்தில் உணர்த்திக்கொண்டு வந்தார்கள். மேலும் இவர் களைச் சாதாரணமான பெண்களைப்போலவே அதிபாலியந் தொடங்கிப் பலவகைத் தொழில்களிலும் பழக்கிக்கொண்டுவந் தார்கள்.

சிலர் ராஜகன்னிகைகளை உப்பரிகைகளில் அடைத்துவைக்கி றதுபோல இவர்களை அடைத்து வைக்காமல், சாதாரணமான ஜனங்களோடு பழகவும், அவர்களுடைய குணதிசயங்களையும், நடை உடை பாவனைகளையும் பார்த்து, கிரகிக்கக்கூடியவற்றைக்

கிரகிக்கவும் விட்டிருந்தார்கள். இவர்களுடைய தேகசௌக்கியத்துக்கு வேண்டிய பழக்கங்களிலும் சோர்வுருமலிருக்கும்படிச் செய்துவைத்தார்கள். இவர்கள் ஒன்பது வயதுக்கெல்லாம் ஜர்மன், பிரென்ச், இட்டாலியன் பாஷைகளில் ஒருவாறு வித்பத்தி யடைந்ததுமன்றி, இவ்வுலகத்தில் அலங்காரமாயும், சிறப்பாயும் இருக்கும் காக்ஷிகளைக்கவனித்து, அவற்றைப்போலப் படங்களெழுதவும் பயின்றுவந்தார்கள். ஒருநாள் சாயங்காலம் சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து, அந்தக் காக்ஷி வெகு விநோதமாயிருந்ததைக் கண்டு, இவர்கள் பெரிய தகப்பனுராகிய நான்காவது உல்லியமென்னும் ராஜாவையும் அழைத்துக்கொண்டுவந்து காண்பித்ததாகச் சொல்லுகிருர்கள். பீத்தோவன் என்னும் ஒரு சங்கீத வித்துவான் தேவஸ்துதியாகப் பாடிய ஒரு பாட்டை முதல் முதல் பாடும்போது கேட்டு, பரவசமாய், உட்கார்ந்த வண்ணம் சித்திரப் பதுமைபோல அசைவற்று வெகுநேரமிருந்ததாகச் சொல்லுகிருர்கள்.

இவர்கள் சிறுவயதிலேயே சங்கீதம் கற்க எத்தனித்து, பியானோ வாசித்துவருகையில், அது இவர்களுக்குக் கொஞ்சத்தில் பிடிபடாமல், இவர்கள் வருத்தப்படுகிறதை உபாத்தியாயர் கண்டு, அம்மா! நீங்கள் இந்த வித்தையைத் தீரக் கற்று, வித்பத்தி யடையவேண்டுமென்று விரும்பினுல், இந்த வருத்தங்களைப் பெரிதாக எண்ணிப் பின்வாங்கலாகாது. நீங்கள் வாசித்ததையே மறுபடியும் அடிக்கடிவாசித்து, சாதகப்படுத்துவீர்களானுல், பின்னுலே இந்த வித்தைக்கு நீங்கள் இட்டது சட்டமாகுமென்று தைரியம் சொன்னுர். இவர்கள் அதைக் கேட்டு அப்படியா, இதற்கு நான் இட்டது சட்டமாகுமா என்று வினவ, உபாத்தியாயர் ஆம், நீங்கள் இட்டது சட்டமாகும், அதற்கு ஐயமில்லையென்றுர். அப்படியானுல், இதற்கு நான் இட்டது இப்பொழுதே சட்டமாகாததற்குக் காரணம் என்னவென்று உபாத்தியாய

ரைக்கேட்டார்கள். அவர் அம்மா! சங்கீத வித்தைக்கு ராஜமார்க்கம் இல்லை, பியானோவுக்கும் ராஜமார்க்கம் இல்லை, எப்படிப்பட்டவர்களும் கஷ்டப்பட்டுத் தான் இவைகளைக் கற்கவேண்டுமென்றார். இவர்கள் அதைக்கேட்டு, சங்கீதத்திற்கு ராஜமார்க்கம் இல்லையா? இந்தப் பியானோவுக்கு இப்பொழுது நான் இட்டது சட்டமாகாதா? பார்ப்போம் என்று சொல்லிக்கொண்டே அந்தப் பியானோவை மூடிப் பூட்டிச் சாவியைக் கையிலெடுத்துக்கொண்டு, இதோ! பார்த்தீர்களா, நான் இட்டது சட்டமாயிற்று. இஷ்டமானபோது சாதகஞ் செய்யப்போகிறதுதான் சங்கீதத்திற்கு ராஜமார்க்கம் என்று சொல்லிவிட்டுக் குறுநகை செய்து, உடனே உட்கார்ந்து பாடத்தைக் கவனித்தார்கள்.

மற்றொருநாள் இவர்கள் வெண்ட்வொர்த் மாளிகையைச்சேர்ந்த நந்தவனத்தைப் பார்க்கும்படியாகப் போயிருந்தபொழுது, அந்தத் தோட்டத்தின் சிங்காரத்தைக் கண்டு களித்து, அதை முற்றிலும் பார்க்கவேண்டுமென்று எண்ணி, கூடவந்திருந்தவர்களைப் பின்னாலே விட்டுத் தீவிரமாய் ஓடினார்கள். அப்பொழுது அங்கே தோட்டவேலைசெய்துகொண்டிருந்த ஒருவன் இவர்கள் ஓடுகிறதைப்பார்த்து, அம்மா! தரை ஈரமாயிருக்கிறது, சறுக்கும், பார்த்து மெதுவாய் நடந்துபோங்கள் என்றான். அதற்கு இவர்கள் சறுக்குமா!—சறுக்குமென்றால் என்ன—என்று கேட்டார்கள். அவன் மிகவும் விநயமாய் அம்மா தரை வழுக்கும் என்று சொன்னான். சிறு பிள்ளை பயமறியாது ஆகையால், அதுதானா? பயமில்லையென்று அவனுக்குச் சொல்லிவிட்டு, விரைவாய் ஓடினார்கள். அப்படிச் சிறிதுதூரம்போனபிறகு அவன் சொற்படியே கால் சறுக்கித் தரையில் விழுந்தார்கள். இவர்கள் விழுந்ததை அந்தத் தோட்டத்து யஜமானன் பார்த்து, இவர்களை எடுத்துவிட ஓடிவந்தார். அவர் வருகிறதற்குள்ளாக இவர்கள் தாமாய் எழுந்து நின்று, அவரைப் பார்த்து நகைத்தார்

கள். அவரும் நகைத்துக்கொண்டே, அம்மா! இன்று தாங்கள் சறுக்கும் என்னும் பதத்தின் பொருளை சொல்லினாலும் அனுபவத்தினாலும் அறிந்திருப்பீர்களென்று சொன்னார். அதற்கு இவர்கள் ஆம், அதன் பொருள் எனக்கு இப்பொழுது நன்றாய்த் தெரிந்தது. நான் அதை எப்பொழுதும் மறக்கவேமாட்டேன் என்று சொன்னார்கள்.

இவர்களுக்கு பிரிட்டிஷ் இராச்சிய முறைமைகளையும், சரித்திர வரலாறுகளையும் லார்ட் மெல்போரன் என்கிற பிரபு புகட்டிக்கொண்டு வருகையில், ஒரு நாள் பூர்வ ராஜாக்களுக்குள்ளே புகழ்பெற்றிருந்த சாலமோன் என்னும் ராஜனுடைய சரித்திரத்திலிருந்து அடியில் வரும் இரண்டொரு விசேஷங்களை எடுத்துப் பிரஸ்தாபித்தார்:—

சாலமோன் ராஜாவுக்குத் தேவன் ஒரு நாள் சொர்ப்பனம் சாதித்து, உனக்கு வேண்டியதைக் கேட்டுக்கொள் என்று சொல்ல, சாலமோன் தேவனைப் பணிந்து, "நான் போக்குவரவு அறியாத சிறு பிள்ளை; தேவரீர் தெரிந்துகொண்டதும் எண்ணிக்கைக்கு அடங்காததுமான உமது ஜனத்தின் கூட்டத்தில் அடியேனை ராஜாவாக்கினீர். உம்முடைய ஜனங்களை நியாயந்தீர்க்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் ஞானமுள்ள இருதயத்தை அடியேனுக்குத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். சாலமோன் நீடிய ஆயுளையாவது, ஐசுவரியத்தையாவது கேளாமல், ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்காகத் தேவன் சந்தோஷப்பட்டு, சாலமோனைநோக்கி, "உனக்கு நீடிய நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நியாயம் விசாரிக்கிறதற்கு எற்ற ஞானத்தையே நீ கேட்டுக்கொண்டபடியால், உன்வார்த்தையின்படியே செய்தேன்.

ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தையே உனக்குத் தந்தேன்; இதிலே உனக்கு ஈடானவன் உனக்கு முன்னிருந்ததுமில்லை. உனக்குப் பின்னிருக்கப்போகிறதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் உனக்குத் தந்தேன். உன் ஆயுள் காலத்தில் எந்த ராஜனும் உனக்கு நிகராகமாட்டான். உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல, நீயும் என் கட்டளைகளையும், நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் ஆயுள் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இவர்கள் இந்தச் சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாகக் கேட்டு, சாலமோனுக்கு அளித்த ஞானவரத்தைத் தனக்கும் கிருபை செய்தருளவேண்டுமென்று தேவனை நோக்கி வெகு ஆவலாக வேண்டிக்கொண்டார்கள்.

இவர்களுக்கு ஆர்ச் பிஷப் ஆப் காண்டெர்பெரி, பிஷப் ஆப் ஸால்ஸ்பெரி, பிஷப் ஆப் லின்கன் என்னும் பிரபல வேதாசிரியர்கள் பக்திநூல்களையும் பக்திக்குரிய சாதனங்களையும் போதித்துக்கொண்டுவந்தார்கள். இந்த ஆசிரியர்களிடத்தில் இவர்கள் தெரிந்துகொண்ட உபதேசங்கள் ஏட்டளவாய் நிற்காமல், இருதயசுத்திக்கும், ஆத்தும உஜ்ஜீவனத்திற்கும் அனுகூலமாயிருந்தனவென்பதற்கு அடியில் குறிக்கப்படும் சம்பவமே நிதரிசனமாகலாம்.

இவர்களுடைய சமயாசாரத்தின்படி "திடப்படுத்தல் என்னும்" சடங்கொன்று இவர்களுக்குச் செய்யப்பட்டபோது, ஆர்ச் பிஷப் ஆப் காண்டெர்பெரி என்னும் பிரதான குரு இவர்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த புத்திமதிகளையெல்லாம் கேட்டு, மனம் உருகினவர்களாகி, இரண்டு கண்களிலுமிருந்து கண்ணீர் தாரை தாரையாகச் சொரிந்ததைச் சமீபத்திலிருந்து அந்தச் சடங்கை

நிறைவேற்றிவைத்த இவர்கள் பெரிய தந்தையாகிய மஹாராஜனும், மற்றப் பந்துக்களும், சினேகிதர்களும் பார்த்துச் சகிக்கமாட்டாமல், அழுதுவிட்டார்கள். இந்தச் சடங்கு நிறைவேறின உடனே, இவர்கள் அங்குவந்திருந்த ராணியாரையும், மற்றப் பந்துக்களையும் கண்டு வணங்கினார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி பலவித ஆசிகள் கூறி, இவர்களை ஆசீர்வதித்து அனுப்பினார்கள்.

1837-ஆு மேமீ 24உ இவர்களுக்கு 18 பிராயமாகி, இங்கிலிஷ் சட்டத்தில் குறித்திருக்கிற பருவகாலம் நிறைவேறினபடியால், அந்தச் சுபதினத்தின் காலையில் தேவாலயங்கள்தோறும் மகிழ்ச்சியாய் மணிகளடித்து, தேவாராதனை நடத்தினார்கள். பற்பல இடங்களிலிருந்து, கல்வி கேள்வியினாலும், செல்வத்தினாலும், சௌந்தரியத்தினாலும், சிறந்தவர்களாகிய பல பிரபுக்களும், அவர்கள் தேவிமார்களும், குமாரத்திகளும் இவர்களைக்கண்டு வாழ்த்தும்படியாய் வந்திருந்து, இவர்கள் ஜனனோற்சவத்தைக் கொண்டாடினார்கள். இது காரியத்துக்காகவே இவர்கள் மைத்துனரும், பிற்காலத்தில் "உத்தமனாகிய ஆல்பெர்ட்" என்று இங்கிலிஷ் ஜனங்களால் மதிக்கப்பெற்றவருமாகிய பிரின்ஸ் ஆல்பெர்ட் என்னும் ராஜகுமாரரும் விஜயஞ் செய்திருந்தார்கள். ஜனனோற்சவம் வெகு சம்பிரமமாக நிறைவேறிற்று.

பட்டாபிஷேகம்.

இதற்கப்பால் ஒரு மாதத்திற்குள்ளாக இவர்கள் பெரிய தகப்பனாராகிய நான்காவது உல்லியமென்னும் மகாராஜன் தேகவியோகமானார். இந்த விசனகரமான சம்பவம் விண்ட்ஸர் மாளி

விண்ட்ஸர்மாளிகை.

கையில், 1837-ஆ ஜூன்மீ 20உ காலையில் இரண்டு மணிக்கு நேரிட்டது. உடனே ராஜனுடைய மந்திரிமார்களிலும், பிரபல உத்தியோகஸ்தர்களிலும் தலைமையானவர்கள் கென்ஸிங்டன் மாளிகைக்குவந்து, நித்திரைசெய்துகொண்டிருந்த இந்த ராஜபுத்திரியை எழுப்பும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். தாதிமார்கள் ராஜபுத்திரியின் நித்திரையைப் பங்கப்படுத்தமாட்டோம் என்று சொல்ல, அவர்கள் நாங்கள் ராஜாங்க விஷயமாய் ராஜபுத்திரியைக் காணவந்திருக்கிறோம், ராஜகாரியத்திற்குமுன் அவர்களுடைய நித்திரையும் தெளிந்துபோகவேண்டும் என்று சொன்னார்கள். அப்படியே இவர்கள் நித்திரை தெளிந்து, இரண்டு மூன்று நிமிஷத்திற்குள்ளாக, இராத்திரி படுக்கையில் தரித்திருந்த ஆடைகளோடு, அவிழ்ந்திருந்த கூந்தலையும் முடிக்காமல், வெகு அவசரமாய் வந்து அந்தக் கனவான்களைச் சந்தித்தார்கள். ஆர்ச்

பிஷப் ஆப் காண்டெர்பெரி என்னும் பிரதானகுரு மகாராஜன் தேகவியோகமான சங்கதியைத் தெரிவித்து, இந்தப்பெரிய இராச்சியத்தை இனி ஆண்டு நடத்த வேண்டிய பாரம் தங்களு டையதென்று சொன்னமாத்திரத்தில், பிதாவுக்குப் பிதாவாக வும், ராஜனுக்கு ராஜனுகவும் இருந்த தமது பெரிய தந்தையை இழந்ததற்காகவும், இளமையிலேயே இந்தப் பிரமாண்டமான ராஜாங்கத்தின் காரியங்களைப் பார்க்கவேண்டிவந்ததற்காகவும் மிகுந்த துக்கத்தையடைந்து, மனங் கலங்கி, நடுநடுங்கி, குரு வை வணங்கி, தாங்கள் இச்சமயத்தில் எனக்காக ஜெபம்செய்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படியே அவ் விடத்தில் வந்திருந்த பிரபுக்களும் குருவும் இவர்களோடு முழந் தாள் படியிட்டு ஜெபம்செய்தார்கள். சாலமோன் ராஜன் அர சாளத்தொடங்கினபொழுது தேவனைநோக்கி, "எண்ணிக்கைக்கு அடங்காததும், இலக்கத்திற்கு உட்படாததுமான உமது ஜனத் தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். நான் போக்குவரவு அறி யாத சிறுபிள்ளை, உம்முடைய ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த் தித்தவண்ணம் நம்முடைய காருணிய இராணியாரவர்களும் பிரார்த்தித்து, தமது அரசாட்சியைத் தொடங்கினர்கள்.

வந்திருந்த கனவான்கள் போய்விட்ட உடனே, இறந்துபோன ராஜாவின் தேவியாராகிய தமது பெரிய தாயாருக்கு நேரிட்ட துயரத்தை ஆற்றும்பொருட்டு உட்கார்ந்து, நிருபமொன்றெ ழுதி மடித்து, இங்கிலாண்டுதேசத்து மகா இராணியாரவர்களு க்கு என்று மேல்விலாசம் எழுதினர்கள். சமீபத்திலிருந்த இவர்கள் பாங்கிமார்களில் சிலர் அந்த மேல்விலாசத்தைப் பார் த்து, இறைவியே! இப்பொழுது தாங்களல்லவா இங்கிலாண்டு தேசத்து மகா இராணியார் என்று சொன்னர்கள். அதற்கு

இவர்கள் நீங்கள் சொல்வது மெய்யேயாயினும், இப்பொழுது வைதவ்வியத்தை அடைந்து, துக்கசாகரத்தில் மூழ்கி இருக்கும் இராணியாருக்கு அதை நான் அறிவிக்கலாகாது என்று சொல்லி, அந்தக்கடிதத்தை யனுப்பிவிட்டார்கள்.

காலையில் ஒன்பது மணிக்கு லார்ட் மெல்போரன் என்னும் மந்திரிவந்து இவர்களைக் கண்டு வார்த்தை சொல்லி, ப்ரிவி கௌன்ஸில் என்னும் ஆலோசனைச் சங்கத்தைச்சேர்ந்த கனவான்களை 11 மணிக்குச் சபைகூடும்படியாகக் கட்டளையிட்டார். அப்படியே அன்று பகல் 11 மணிக்கு அவர்கள் சட்டப்படி சபை கூடிவந்து, அதிக கம்பீரமும் பராக்கிரமமும் உள்ளவராகிய அலெக்சான்ட்ரினு விக்டோரியா என்னும் எங்கள் இறைவி தேவாநுக்கிரகத்தினுல் இந்தப் பிரிட்டிஷ் இராச்சியத்திற்கு இராணியார் ஆனுர்களென்று முரசு அறைந்து பிரசித்தப்படுத்தின மாத்திரத்தில், இராணியார் தமது தாயாராகிய டச்செஸ் ஆப் கெண்ட் என்பவரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார்கள். அங்கே சபைகூடிவந்திருந்த மந்திரி பிரதானிகளும், மற்றக் கனவான்களும் இராணியாரை வணங்கி, தங்களுடைய துரைத்தனத்திற்கு அடங்கி நடப்போம் என்று பிரமாணஞ் செய்த வண்ணமே, இவர்களுடைய சிறிய தகப்பனுராகிய டியூக் ஆப் ஸஸ்ஸெக்ஸ் என்பவரும் நெருங்கிவந்து, இவர்களுக்கு ராஜமரியாதை செய்யும்பொருட்டு முழந்தாள்படியிட எத்தனித்தபொழுது, இராணியார் அவருடைய கழுத்தை இரண்டு கைகளாலும் கட்டிக்கொண்டு, அவர் கன்னத்தில் முத்தமிட்டு, அப்பா! தாங்கள் எனக்கு முழந்தாள் படியிடலாமா? நான் இன்னமும் தங்களுடைய குமாரத்தியாகிய விக்டோரியா தானே என்று சொல்லி அவரைத் தடுத்தார்கள். அங்குவந்திருந்தவர்களெல்லாரும் இந்த உருக்கமான வார்த்தைகளைக்கேட்டு ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.

இராணியார் பிறகு சபையாரைநோக்கி, "இந்தப் பிரமாண்டமான இராச்சியபாரம் அறியாதவளாகிய என்மேல் திடீரென்று விழுந்தது. என்னை இந்தப் பட்டத்திற்கு அழைத்த தேவன் என்னோடுகூட இருந்து இதைத் தாங்கிக்கொண்டு போகும்படியாக உதவிசெய்தருளுவாரென்னும் நம்பிக்கையானது நான் நொறுங்குண்டு போகாதபடிக்கு என்னைக்காத்து ஆதரிக்கின்றது. வயதில் முதிர்ந்தவர்களும், அனுபவசாலிகளுமாகிய ராஜாக்களுக்குத் தெரிந்த உபாயங்களும், யுக்திகளும் எனக்குத் தெரியாவிட்டாலும், துரைத்தன விஷயத்தில் எனக்குண்டாயிருக்கிற சிரத்தையும், என் களங்கமற்ற நோக்கங்களும் எனக்கு உதவி செய்புமென்று நம்புகிறேன். இங்கிலாண்டில் பிறந்தவளும், அன்பிலும் புத்தியிலும் சிறந்த எனது தாயாருடைய ஆதரவில் வளர்ந்தவளுமாகிய நான் என் சுதேசத்தின் ராஜாங்க முறைமைகளைப் போற்றிப்பேண அதிபாலியம் தொடங்கிப் பயின்றிருக்கிறேன். இத்தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சமயாசாரங்களுக்குக் குறைவு வராமல் ஆதரிக்கவும், என் குடிகளுக்கு எந்த எந்த மார்க்கத்தில் பற்றுண்டாயிருக்கிறதோ, அந்த அந்த மார்க்கத்தை அவர்கள் அவலம்பிப்பதற்கு வேண்டிய சுதந்தரத்தை உண்டுபண்ணிக்கொடுக்கவும் இடைவிடாமல் முயற்சி செய்வேன். இந்த இராச்சியத்திலுள்ள சகலமான குடிகளுடைய சௌக்கியத்திற்காகவும் அபிவிர்த்திக்காகவும் என்னால் இயன்றமட்டும் பிரயாசப்படுவேன்'' என்று கட்டளையிட்டார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்ட சபையார் அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

மறுநாள் (ஜூன்மீ 21௳) மகா இராணியாரவர்கள் தமது பரிவாரங்களோடு ஸெண்ட் ஜேம்ஸ் மாளிகைக்குப் போனார்கள். அந்த மாளிகையின் வாசலில் பற்பல சேனைகளும், சேனைத்தலைவர்களும், கனவான்களும், அனேக ஜனங்களும் இராணியார் சேவைக்காக வந்திருந்தார்கள். 10 மணிக்குச் சேனைகளோடு சேர்

ந்த பல வாத்தியங்கள் முழங்கின. பார்க்-டௌவர் என்கிற இடங்களிலிருந்து இரட்டை வெடிகள் தீர்ந்து ராஜமரியாதை செய்யப்பட்டது. உடனே மார்க்விஸ் ஆப் லான்ஸ்டௌன் என்னும் பிரபு மகா இராணியாரவர்களை வாசலுக்கு எதிரிலிருந்த பெரிய சாளரத்திற்கு அருகில் நடத்திக்கொண்டுபோனார். ஜனங்கள் அவர்களைத் தரிசித்தவுடனே "எங்கள் இராணியார் பல்லாண்டு பல்லாண்டாக வாழக்கடவர்" என்று பல மங்களங்களைச் சொல்லி ஜெயமுழக்கம் செய்தார்கள். அதைக் கேட்ட மாத்திரத்தில் இராணியாரவர்களின் இரு விழிகளிலிருந்தும் கண்ணீர் தாரைதாரையாகச் சொரிந்தது. வந்திருந்த பிரஜைகள் கேட்கும்படி மகா இராணியாரவர்கள் பிரிட்டிஷ் இராச்சிய பட்டத்திற் குரியவர்களானார்களென்று விளம்பரஞ் செய்தவுடனே, முன்போலவே வாத்தியங்கள் முழங்க, பார்க்-டௌவர் என்னும் இடங்களிலிருந்து இரட்டை வெடிகள் தீர்ந்தன. இராணியாரவர்கள் சாளரத்தை விட்டு அரண்மனைக்குள் பிரவேசித்தபிறகு, தூதுவர் பிரிட்டிஷ் ராஜதானியாகிய லண்டன் பட்டணத்திற்கு வெகு ஆடம்பரங்களோடு சென்று, அந்த நகரவிசாரணைத் தலைவராகிய லார்ட் மேயர் என்பவர் முன்னிலையில், வழக்கப்படி, மேற்படி விளம்பரத்தைப் பிரசித்தம்செய்தார்கள். அந்த நகரவாசிகள் இந்த விளம்பரத்தைக் கேட்டமாத்திரத்தில் "எங்கள் இராணியாரைக் கடவுள் காப்பாராக" என்றும், "எங்கள் இராணியார் சிரஞ்சீவியாக வாழக்கடவர்" என்றும் வாழ்த்தி, பற்பல வாத்தியங்கள் முழங்க, ஜயாவிஜயீபவா வென்று கொண்டாடினார்கள்.

சிலநாட்களுக்குப் பிறகு மகா இராணியாரவர்கள் லண்டன் நகரத்திற்கு விஜயஞ்செய்யப்போகிறார்களென்று அந்நகரவாசிகள் கேள்விப்பட்டு, அந்த நகரத்தை வெகு வேடிக்கையாய் அலங்காரம்செய்து, கில்ட்ஹால் என்னும் மாளிகையில் இராணியாரவர்களுக்கு விருந்து செய்விக்கச் சித்தம்பண்ணி வைத்

தார்கள். தாம் வாசம்பண்ணிக்கொண்டிருந்த பக்கிங்ஹாம் மாளிகையிலிருந்து இராணியார் புறப்பட இன்னும் வெகுநேரம் இருக்கையில்தானே திரளான ஜனங்கள் ராஜவீதிகள்தோறும் கூடிவந்து நெக்கரித்துக்கொண்டு இருந்தார்கள். வீதிகள்தோறும் சேனைகளும் சுவர் வைத்ததுபோல் வரிசையாய் நின்றுகொண்டிருந்தார்கள். 2-மணிக்குமேல் இராணியாரவர்கள் புறப்பட்டார்கள். குதிரைப்பட்டாளங்கள் முன் செல்ல, அவ்வாறு குதிரைகள் பூட்டியிருந்த ரதங்களிலேறி இராணியாரவர்களுடைய தாயாரும், இராணியாரவர்களுடைய சிறியதகப்பன்மார்களாகிய டியூக் ஆப் கேம்பிரிட்ஜ், டியூக் ஆப் ஸஸ்ஸெக்ஸ் என்பவர்களும் வந்தார்கள். இவர்களுக்குப் பின்னுல் ராஜகுடும்பத்தார்கள் ஏறி இருந்த ஆறு ரதங்கள் வந்தன. அவை ஒவ்வொன்றிலும் ஆறு குதிரைகள் பூட்டியிருந்தன. இவற்றிற்குப் பின் மகா இராணியாரவர்கள் ஏறி இருந்த ராஜ உற்சவரதம் வந்தது. இந்த ரதத்திற்குப் பின் குதிரைப் பட்டாளங்களும், அவைகளுக்குப்பின் பற்பல ராஜாக்களிடத்திலிருந்து வந்திருந்த தானுதிபதிகளும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தைச்சேர்ந்த மந்திரி பிரதானிகளும், டியூக் ஆப் வெலிங்டன் முதலிய வீராதிவீரர்களும், ஆர்ச் பிஷப் ஆப் காண்டெர்பெரி முதலான வேத வேதியர்களும் கிரமப்படி புடைசூழ்ந்து வந்தார்கள். இராணியாரவர்கள் ரோஜாவருணமான பட்டாடைகள் உடுத்து, கோடிசூரியப்பிரகாசமான மகுடம் ஒன்று தரித்து, கையில் புஷ்ப துராயொன்று பிடித்துக்கொண்டு வந்தார்கள். வழியில் "எங்கள் இராணியாரைக் கடவுள் காக்கக்கடவர்" என்னும் சத்தம் ஓயாமல் முழங்கிக்கொண்டேவந்தது. குழந்தைகள் முதலாய் தேவன் எங்கள் இராணியை ஆசீர்வதிக்க வேண்டுமென்று பாடினுர்கள். தேவாலயங்கள்தோறும் பரமானந்தமாய் மணிகள் அடித்துக்கொண்டிருந்தன. லண்டன் நகரத்திலிருந்து அந்நகர விசாரணைக் கர்த்தர்



பக்கிங்ஹாம் மாளிகை.

களாகிய லார்ட் மேயர், ஷெரிப், ஆல்டர்மன் முதலானவர்கள் எதிர்கொண்டுவந்து இராணியாரை வணங்கினார்கள். லார்ட் மேயர் இராணியாரின் ரதத்திற்குச் சமீபத்தில்போய் அவர்களைச் சேவித்து, இந்நகரத்தின் காவலுக்காகச் செய்திருக்கிற இந்தப் பட்டயத்தைத் தங்களிடத்தில் ஒப்புவிக்கும்படி இந்நகரவாசிகள் என்னைக்கேட்டுக்கொண்டார்கள் என்று சொல்லி, தன்னுடைய பட்டயத்தை எடுத்துச் சமர்ப்பித்தார். இராணியார் புன்னகையோடு அந்தப்பட்டயத்தின் கைப்பிடியைத்தொட்டு, அவருக்குக் கிருபாநோக்கு அளித்து, இந்தப்பட்டயம் உம்மிடத்தில் தானே இருக்கட்டும் என்று கட்டளையிட்டார்கள். அவர் அந்தப் பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு தன் குதிரையின்மேல் ஏறி, இராணியாரவர்களுடைய ரதத்திற்குமுன் சென்றார். உடனே வெகுதூரத்திலிருந்து பீரங்கிவெடிகள் தீர்ந்தன. ஜனங்கள் முன்போலவே ஜயாவிஜயீபவா என்று பல முறை ஆர்ப்பரித்தார்கள். க்ரைஸ்ட்ஸ் ஹாஸ்பிட்டல் என்று சொல்லப்பட்ட ஒரு தர்ம பள்ளிக்கூடத்திற் கருகாமையில் இராணியாரவர்களுடைய ரதம் போய்க்கொண்டிருக்கையில், அப்பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் இராணியாருக்கு உபசாரப் பத்திரிகை ஒன்றை சமர்ப்பித்து, "எங்கள் இராணியாரைக் கடவுள் காக்கக்கடவர்" என்று பாடினார்கள். இத்தனை வைபவங்களோடு இராணியார் கில்ட் ஹால் என்னும் மாளிகையில்போய் இறங்கினார்கள். போசனக் கூடம் வெகு வேடிக்கையாய்ப்பட்டுச் சரிகை வேலைகளினாலும், புஷ்பங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இராணியாரவர்களுக்கு இயற்றி இருந்த ஆசனம் சிவப்புப் பட்டுவெல்வெட்டு சரிகை முதலியவற்றால் வெகு விநோதமாய்ச் சோடித்திருந்தது. அந்த ஆசனத்திலும், அதன் பக்கங்களிலும், பிரிட்டிஷ் ராஜ சின்னங்களும் முடிகளும் அமைத்துவைத்திருந்தன. அந்தக் கூடத்தின் அலங்காரத்தை அன்று அவ்விடத்தில் ஏற்றியிருந்த

46,000ம் மெழுகு வர்த்திகளின் ஜோதியொன்றினாலேயே அறியலாம். போஜனபந்தியில் உட்காருகிறதற்குமுன், அந்நகர விசாரணைத் தலைவர்களாகிய லார்ட் மேயர், ஷெரிப் முதலானவர்களுக்கு இராணியாரவர்கள் பிரபுத்துவ பட்டங்கள் அளித்தார்கள். போஜனமான உடனே லார்ட் மேயர் எழுந்து, "நம்முடைய காருணிய இராணியாரவர்களுடைய க்ஷேமத்தைக் கோருகிறேன்" என்ற மாத்திரத்தில் பந்தியில் இருந்தவர்கள் எல்லாரும் எழுந்து, "எங்கள் இராணியாரைக் கடவுள் காக்கக்கடவர்" என்று பாடினார்கள். பிறகு இராணியார் எழுந்து அங்குவந்திருந்தவர்களுக்கெல்லாம் வந்தனஞ்சொல்லி, கட்டியக்காரனைக்கொண்டு, "லார்ட் மேயருடைய க்ஷேமத்தையும், இந்த லண்டன் நகரவாசிகளுடைய க்ஷேமத்தையும் நான் விரும்புகிறேன்" என்று அறிவித்தார்கள். உடனே கூட்டத்திலிருந்தவர்கள் "ராஜகுடும்பத்தின் க்ஷேமத்தை விரும்புகிறோம்" என்று விசேஷ உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தார்கள். இவை யாவும் முடிய $8\frac{1}{2}$ மணியாயிற்று. இராணியார் லண்டன் நகரவாசிகளாகிய தமது குடிகள் அன்று செய்த உபசாரங்களுக்காக அவர்களுக்கு வந்தனஞ்சொல்லி, செலவுபெற்றுக்கொண்டு தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார்கள். வழிமுழுதும் பாணவேடிக்கைகளும், மத்தாப்பு வேடிக்கைகளும் பார்க்கப்பார்க்க வெகு விநோதமாய்ச் செய்யப்பட்டதுமன்றி, சாயங்காலம் நடந்த வைபவங்கள் எல்லாம் மறுபடியும் இரண்டுபங்கு அதிகமாக நடந்தன.

1838 ம் வருஷம் ஜூன்மீ 28வ மகா இராணியார் அவர்களுக்கு மகுடாபிஷேகம் நிறைவேறியது. அந்தக் காக்ஷியைக் காணும்படியாகப் பற்பல இடங்களிலிருந்து 4,00,000 ஜனங்கள் லண்டன் நகரத்திற்கு வந்திருந்தார்கள். துரைத்தனத்தார் இந்த மகுடாபிஷேகத்திற்காக 7,00,000 ரூபாய் செலவிட்டார்கள். ராஜவீதியோரங்களில் நின்று வேடிக்கை பார்த்த

ஜனங்கள் தாம் நின்ற இடங்களுக்கு அன்று கொடுத்த குடிக் கூலிமாத்திரம் 20,00,000 ரூபாய் ஆயிற்று. இவற்றால் அந்த மகுடாபிஷேகத்தின் சிறப்பை ஒருவாறு அறியலாம். அதிகாலையில் 3 - மணிக்கெல்லாம் 21 பீரங்கி வெடிகள் லண்டன் நகரவாசிகளை எழுப்பி விட்டன. 4 - மணிக்குள்ளாக வீதிகளில் திரளான ஜனங்களும், ரதங்களும் நெக்கரித்து நிற்கவே போக்குவரவுசெய்தல் வெகு வருத்தமாய் இருந்தது. மகுடாபிஷேகத்திற்கு இராணியார் புறப்பட நியமித்திருந்த 10 - மணி வரையில் மழைத்துளிகள் விழுந்துகொண்டிருந்ததனால், வேடிக்கைகள் யாவும் நடவா என்று ஜனங்கள் சந்தேகப் பட்டுக்கொண்டிருந்தார்கள். இராணியாரவர்கள் தமது ரதத்தின்மேல் ஏறினவுடனே மழை நின்றுபோயிற்று. இராணியாரவர்கள் அன்று தரித்திருந்த வஸ்திராபரணங்கள் பார்க்கப் பார்க்க வெகு விசித்திரமாயிருந்தன. முன் லண்டன் நகரத்திற்கு இராணியார் போயிருந்தபோது நடந்த ஆடம்பரங்களைப் பார்க்கிலும், ஆயிரமடங்கு அதிகமான வைபவங்கள் நடந்தன. அவற்றை எல்லாம் விசதமாய் எடுத்துரைக்க இந்தச் சிறு புத்தகத்தில் இடமில்லை. இராணியாரவர்கள் வாசம்பண்ணிக்கொண்டிருந்த பக்கிங்ஹாம் மாளிகையிலிருந்து மகுடாபிஷேகம் நடக்கிற வெஸ்ட் மின்ஸ்டர் ஆபே என்னும் தேவாலயம் வரையில் கூடியிருந்த பிரஜைகளின் கண்ணும் கருத்தும் இராணியாரவர்களுடைய ரதத்தைத் தொடர்ந்துவர, தண்டத்தலைவர், அணித்தலைவர், யூகத்தலைவர், மகுடவர்த்தனர், பட்டவர்த்தனர், வேதவேதியர் முதலான பெரியோர்களும், பற்பல ராஜாங்கங்களிலிருந்து வந்திருந்த தானாதிபதிகளும் தங்கள் தங்கள் அந்தஸ்த்துக்குரிய சின்னங்களோடு கிரமப்படி புடைசூழ்ந்து வந்தார்கள். மகா இராணியாரவர்களும் மகுடாபிஷேகத்திற்கு வந்திருந்த கனவான்களும் பெரியோர்களும் மேற்படி

மகுடாபிஷேகம்.

தேவாலயம் வந்துசேர்ந்து தங்கள் தங்கள் ஆசனங்களில் இனிது வீற்றிருக்க, ஆர்ச் பிஷப் ஆப் காண்டெர்பெரி என்னும் பிரதான குரு எழுந்துநின்று சபையாரைப்பார்த்து, "கனவான்களே! இந்த இராச்சியத்தின் பட்டத்திற்கு உரியவர்களாயிருக்கும் விக்டோரியா இராணியாரை நீங்கள் தரிசிக்கும்வண்ணம் இதோ வரவழைத்திருக்கிறேன். அவர்களைக் கண்டு வணங்கும்படியாக வந்திருக்கிற நீங்கள் இப்பொழுது அப்படி

பிரிட்டிஷ் கிரீடம்.

வணங்கப்போகிறீர்களா?" என்று கேட்டார். சபையார் எல்லாரும் ஏகோபித்து மாறுத்தரமாகத் "தேவன் எங்கள் இராணியாராகிய விக்டோரியா அவர்களைக் காக்கக்கடவர்" என்று வெகு உற்சாகத்தோடு சொல்லி வணங்கினார்கள். பிரதான குரு மகுடாபிஷேகச் சடங்குகளைக் கிரமமாய் ஒன்றுக்குப்பின் ஒன்றாக ஜெபத்தியானங்கள்செய்து நிறைவேற்றி, இராணியாரவர்கள் இராஜாக்கள் வழக்கமாய்ச் செய்யும் பிரமாணத்தைச் செய்

தவுடனே, இங்கிலிஷ் ராஜசின்னங்களாகிய பட்டயம், அங்கி, பூமண்டலத்திற்கு அடையாளமானகோளம், மோதிரம், செங்கோல் முதலியவற்றைக் கொடுத்து, முடிசூட்டி, வேதாகமத்தைக் கையில் கொடுத்து ஆசீர்வாதஞ் செய்து, சிம்மாசனத்தில் உட்காரவைத்து, யாவரும் பரமானந்தத்தை அடையும்படியாக மகுடாபிஷேகச் சடங்கை நிறைவேற்றி யருளினர். மூன்று மணிக்குமேல் தேவாலயத்திலிருந்து கிரீடதாரியாகக் கையில் பூகோளத்தையும், செங்கோலையும் ஏந்திக்கொண்டு, புறப்பட்டு வருகையில், "தேவன் தங்களை ஆசீர்வதிக்கக்கடவர்" என்னும் வார்த்தைகள் வழிமுழுதும் தொனித்துக்கொண்டே இருந்தன. அன்று இரவில் லண்டன் நகரத்தில் விருந்து நடவாத வீடும், பாண வேடிக்கை நடவாத வீதியும் இல்லை. டியூக் ஆப் வெலிங்டன் செய்துவைத்த விருந்திற்குமாத்திரம் 2000 கனவான்களும் அவர்கள் தேவிமார்களும் வந்திருந்தார்கள். இராணியாரவர்கள் மாளிகையிலும் ராஜவிருந்து நடந்தது. பிறகு இரண்டு நாள் வரையிலும் ஹைட் பார்க் என்னுமிடத்தில் கூட்டங்கூடி, சாதாரணமான ஏழை ஜனங்களும் மகுடாபிஷேக உற்சவத்தைக் கொண்டாடினார்கள்.

கலியாணம்.

இந்த மகுடாபிஷேகத்திற்குத் தூரதேசங்களி லிருந்தும் அநேக கனவான்களும் ராஜபுத்திரர்களும் வந்திருந்தார்கள். அவர்களில் டியூக் ஆப் ஸாக்ஸ் கோபர்க் கோதா என்பவரும், அவருடைய குமாரர்களாகிய பிரின்ஸ் ஆல்பெர்ட் என்பவரும், பிரின்ஸ் அர்னெஸ்ட் என்பவரும் முக்கியமானவர்களா யிருந்தார்கள். மகுடாபிஷேக வைபவங்களெல்லாம் நிறைவேறின பின்னும் இவர்கள்மாத்திரம் விண்ட்ஸர்மாளிகையில் சில நாள் தங்

கியிருந்து கோபர்க் நாட்டுக்குத் திரும்பிப்போனார்கள். இவர்கள் திரும்பிப் போனபிறகு இவர்களில் பிரின்ஸ் ஆல்பெர்ட் என்னும் ராஜகுமாரனை விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென்று மகா இராணியாரவர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கிறதாக இங்கிலாண்டு தேசத்தில் வதந்தியொன்று பிறந்தது. இந்த வதந்தியை ஜனங்கள் நம்பத்தகாதென்று மந்திரி பிரதானிகள் நேர்ந்தும் சூழ்ந்தும் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள்.

முறையில் இந்த ராஜகுமாரன் இராணியாருக்கு மைத்துனராக வேண்டியது. இவர் 1819-ம் ௵ ஆகஸ்டு௴ 20வ. ரோஸ்னௌ என்னும் பட்டணத்தில் பிறந்து, ஜர்மனி தேசத்தில் பேர்பெற்றிருந்த பான்நகரத்துச் சர்வகலாசாலையில் 1837-ம் ௵ம் பிரவேசித்து, பலவித பரீக்ஷைகள் கொடுத்து நியாய சாஸ்திரத்தில் விசேஷ வித்பத்தியடைந்து, 1838-ம் வருஷத்தின் முடிவில் மேற்படி கலாசாலையைவிட்டு நீங்கினார். அங்கு அவர் வித்தியாப்பியாசஞ் செய்துகொண்டு வருகையில், ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று மணிநேரம் தவிர மற்றக்காலமெல்லாம் வெகு பிடிவாதத்தோடு கல்வி கற்றுக்கொண்டே வருவார். அவர் அந்தக் கலாசாலையின் பின்புறத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்த சிறு வீடொன்று நாளதுவரையில் அங்கு அழியாமலிருக்கிறது. சித்திரப்படங்களெழுதுவதிலும், வேளாண்மைத்தொழில் செய்வதிலும் பாலியத்திலேயே வெகு சமர்த்தராயிருந்தார். அவர் அப்பொழுது எழுதிவைத்த சித்திரப்படங்களில் அநேகம் நாளது வரையில் வெகு உயர்வாக மதிக்கப்பட்டு வருகின்றன.

இவருடைய யௌவனத்தையும், சௌந்தரியத்தையும், திவ்விய தேஜஸையும், சௌரிய பராக்கிரமத்தையும், தயை தாக்ஷிணியத்தையும், பொறுமையையும், யுக்தியையும், மெய்த்தேவ பக்தியையும் பார்த்தபெரியோர் இவரே இங்கிலாண்டு தேசத்து

மகா இராணியாரவர்களுக்குத் தகுந்தபுருஷர், இவரையன்றி வேறொருவரும் இல்லை என்று மதித்தார்கள். மகா இராணியாரவர்களுடைய அபிப்பிராயமும் அப்படியே இருந்தமையால், இந்த ராஜபுத்திரன் மகுடாபிஷேகத்திற்கு வந்திருந்துபோன சிலநாள்பொறுத்து, தமது படம் ஒன்று எடுத்து அவருக்கு அனுப்பிவைத்தார்கள். ராஜபுத்திரன் அப்பொழுது கோபர்க் நாட்டிலில்லாமல், இட்டலி தேசத்திற்குப் போயிருந்தார். அங்கிருந்து திரும்பி வந்தவுடனே, இந்தப் படம் அவருக்குக் கிடைத்தது. அதன் கருத்து இன்னதென்று உணர்ந்து, அதற்கிசைந்தவராய், மகா இராணியாரவர்களுடைய அம்மானாகிய பெல்ஜியம் தேசத்து அரசனை இது காரியத்தை ஆராய்ந்து பார்த்து, தமக்கு அனுகூலமாகவே இதனை முடித்து வைக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். அவர் இருதிறத்தாருக்கும் வேண்டியவராகையால், இங்கிலாண்டு தேசத்திற்குக் காலதாமசமின்றி வந்து, மகா இராணியாரவர்களுடைய மனோபாவத்தைத் திட்டமாயறிந்துகொண்டுபோய், ராஜகுமாரனையும் அனுப்பி, காரியானுகூலம் செய்துவைத்தார். உடனே இராணியாரவர்கள் தமது மந்திராலோசனைச் சபையாருக்குத் தமது மனோபாவத்தை அறிவித்து, அவர்களுடைய முழுச்சம்மதத்தையும் பெற்று, பார்லமெண்ட் என்னும் மகாசபை கூடினபோது அந்தச் சபையாரை நோக்கி, "நான் இப்பொழுது செய்யத் தீர்மானித்திருக்கும் சம்பந்தம் தேவானுக்கிரகத்தினால் என் குடும்ப சௌக்கியத்திற்கும், எனது குடிகளுடைய சௌக்கியத்திற்கும் அனுகூலமாகவே இருக்குமென்று உறுதியாக நம்புகிறேன்" என்று அறிவித்தார்கள். அந்தச் சபையைச் சேர்ந்த இரண்டொருவர் பிரின்ஸ் ஆல்பெர்ட்டின் குணாதிசயங்களைத் தீர அறியவேண்டுமென்று கேட்டபோது, மகா இராணியாருடைய சிறிய தகப்பனாகிய டியூக் ஆப் கேம்பிரிட்ஜ் எழு

ந்து, அவரை நான் நன்றாய் அறிவேன், அவர் இத்தேசத்தாரு டைய மதிப்பையும், அன்பையும் பெறத் தகுந்தவர் என்று சொன்னார். அதைக் கேட்டு பார்லமெண்டாரும் இந்தச் சம் பந்தம் செய்வதற்கு உடன்பட்டார்கள்.

1840-ம் வருஷம், பெப்பிரவரிமீ 10௳ மகா இராணியா ரவர்களுடைய கலியாணம் செண்ட் ஜேம்ஸ் மாளிகையைச் சேர்ந்த தேவாலயத்தில் நடந்தது. இதற்குமுன் இங்கிலிஷ் ராஜாக்கள் இராத்திரி 7-அல்லது 8-மணிக்குமேல் விவா கஞ்செய்துகொள்ளுகிறது வழக்கமாயிருந்தும், அப்படிச் செ ய்தால் குடிகளுக்குச் சங்கடமாயிருக்கும் என்று அறிந்து, இ ராணியாரவர்கள் மத்தியானத்தில்தானே விவாகத்தை நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மகுடாபி ஷேகத்தைப்போல, அவ்வளவு பிரசித்தமானதாய் இது இரா விட்டாலும், காலையில் 9-மணிக்கெல்லாம் பக்கிங்ஹாம் மாளிகையிலிருந்து, செண்ட்ஜேம்ஸ்மாளிகைவரையில் ஜனங்கள் போகவர வழியில்லாமல் நெக்கரித்துக்கொண்டார்கள். மகா இராணியாரவர்களுடைய பாங்கிமார்களும், பிரின்ஸ் ஆல்பெர்ட் அவர்களுடைய தோழர்களும் முன்னாலேவந்து தேவாலயத் தின் வாசலில் இராணியாரவர்களுடைய வரவை எதிர் நோ க்கிக்கொண்டிருந்தார்கள். பிரின்ஸ் ஆல்பெர்ட் பிரிட்டிஷ் தள கர்த்தர்களைப்போல உடுத்து, விசேஷ ஆபரணங்கள் ஒன்றுமி ல்லாமல், பச்சை வெல்வெட்டில் கட்டின வேதபுத்தகத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, தமது தந்தையாகிய டியூக் ஆப் சா க்ஸ் கோபர்க் வலது பக்கத்திலும், தமது தம்பியாகிய பிரின்ஸ் அர்னெஸ்ட் இடது பக்கத்திலும் வர, பற்பல வாத்தியங்களோடு தேவாலயம் வந்து சேர்ந்து, தமக்கு ஆயத்தம் பண்ணியி ருந்த இடத்தில்போய் உட்கார்ந்தார். வழிமுழுதும் ஜனங்கள் வெகு உற்சாகத்தோடு ராஜாவுக்குச் செய்யவேண்டிய மரியா

தைகளை இவருக்குக் குறைவின்றிச்செய்தார்கள். இராணியாரவர்களும் விசேஷமான ஆபரணங்களொன்றும் அணியாமல், சிரசில் இங்கிலாண்டு தேசத்து ஆரெஞ்ஜ் மொக்குகளையணிந்து, காதில் வைரக்காதணியும், கழுத்தில் வைரத்தாழ்வடமும் பூண்டு, ஆர்டர் ஆப் தி கார்ட்டர் என்னும் விருதையும் தரித்து, தமது தாயாராகிய டச்செஸ் ஆப் கெண்ட் அவர்களோடும், டச்செஸ் ஆப் ஸதர்லண்ட் அவர்களோடும் ஒரே ரதத்தில் ஏறி, குதிரைப் பட்டாளங்கள் புடை சூழ்ந்துவர, மெதுவாக வந்தார்கள். இராணியாரவர்களுடைய ரதத்தைக் கண்டமாத்திரத்தில், ஜனங்கள் அங்கங்கே, வழிமுழுதும், விசேஷ உற்சாகங் கொண்டவர்களாய், அவர்களை வாழ்த்திப் பலமங்கலங்கள் கூறினார்கள். இராணியாரும் அவர்களுக்கு ஓயாமல் கிருபாநோக்கு அளித்து, அவர்கள் கூறிய பல ஆசிகளை ஏற்றுக்கொண்டு வந்தார்கள். இராணியாரவர்களுடைய அகத்தில் அத்தருணத்தில் உண்டாயிருந்த கவலைகளும் கலக்கங்களும் முகத்தில் விளங்கி, அவர்களுக்கியல்பான தேஜசு சிறிது மங்கி இருந்ததுபோலக் காணப்பட்டது. தேவாலயத்திற்கு வந்து சேர்ந்தவுடனே, தமது பாங்கிமார்களும் பந்து ஜனங்களும் உத்தியோகஸ்தர்களும் எதிர்கொண்டுவந்து, இறக்கி அழைத்துக் கொண்டு போனார்கள். இராணியாரவர்கள் வந்து சேர்ந்த சங்கதி தெரிந்தவுடனே. "ராஜவாழ்த்து" என்னும் கீதம் வெகு விநோதமாகப் பாடப் பட்டது. அதைப் பாடிக்கொண்டிருக்கையில் இராணியாரவர்கள், சித்திரப் பதுமைகளையொத்த தமது பன்னிரு தோழிமார்களுடனே நடந்து குரு பீடத்திற்கு எதிரில்போய் உட்கார்ந்தார்கள். அந்த ஆலயத்தில் 92,260 ரூபாய் செலவுசெய்து, 1760 பேருக்கு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அவைகளில் வந்து உட்கார்ந்தவர்களில் பெரும்பாலார் இங்கிலிஷ் சீமாட்டியராக இருந்தார்கள். இந்த விவாக மகோற்சவத்

திற் கேற்றபடி அவர்கள் பற்பல விதமான பட்டாடைகள் உடுத்து, உயர்ந்த ஆபரணங்கள் அணிந்திருந்தார்கள். ஆர்ச் பிஷப் ஆப் காண்டெர்பெரி என்னும் பிரதான குருவும், லண்டன் பட்டணத்துக் கண்காணியாரும் இந்த விவாகத்தை இங்கிலிஷ் திருச்சபை விதிப்படி நிறைவேற்றினார்கள். இராணியாரவர்களும் பிரின்ஸ் ஆல்பெர்ட் அவர்களும் ஒருவருக்கொருவர் செய்து கொடுக்க வேண்டிய உடன்படிக்கையை யாவரும் கேட்கும்படிச்செய்து கொடுத்தபிறகு இராணியாரவர்கள் சிறிய தகப்பனாராகிய டியூக் ஆப் ஸஸ்ஸெக்ஸ் என்பவர் அவர்களைக் கன்னியாதானம்செய்தார்கள். ஏறக்குறைய 1 - மணிக்கு இங்கிலாண்டு தேசாசாரத்தின்படிக் கலியாணஞ்செய்துகொண்ட தம்பதிகள் மோதிரம் மாற்றிக்கொள்ளும் சமயத்தில், பீரங்கி வெடிகள் விவாக மகோற்சவம் நிறைவேறியதென்று சகலருக்கும் அறிக்கையிட்டன. மகா இராணியாரவர்களும், அவர்களுடைய நாயகரும் வந்திருந்த பெரியோர்களையும், கனவான்களையும் வணங்கி நின்று, அவரவர்கள் கூறிய பல ஆசிகளையும் ஏற்று, இங்கிலிஷ் சட்டத்தின்படி விவாக உடன்படிக்கையில் சாக்ஷிகளறியக் கையெழுத்துப்போட்டு, தங்கள் அரண்மனையைப்போய்ச் சேர்ந்தார்கள். சிறிது நேரத்திற்குப்பிறகு அவ்விடத்தில் மணவிருந்து வெகு சம்பிரமமாய் நடந்தது. அந்த விருந்து காலத்தில் வழங்கின மாரெஜ் கேக் என்னும் அதிரசம் ஒன்றுமாத்திரமே 300 இராத்தல் இடையுள்ளதாகவும், 14 அங்குலம் கனமுள்ளதாகவும், 3 கஜம் சுற்றளவுள்ளதாகவும் இருந்ததாம். விருந்து முடிந்தபிறகு பல வாத்தியங்கள் முழங்கி, வந்திருந்த பந்துக்களும், சினேகர்களும் பல மங்களங்களைப்பாடித் தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள். பிறகு மகா இராணியாரவர்களும், அவர்கள் நாயகரும் அகமகிழ்ந்து, முகமலர்ந்து, வெகு உல்லாசமாய் விண்ட்ஸர் மாளிகையைப்போய்ச் சேர்ந்தார்கள்.



இராணியாரும் அவர்கள் நாயகரும்.

அன்று ராஜகுடும்பத்தாரும், இங்கிலிஷ் கனவான்களும், சாதாரண ஜனங்களும் தங்கள் கௌரவத்திற்கும், சக்திக்கும் ஏற்றபடி விருந்திட்டு, இந்தச் சுபகாரியத்தைக் கொண்டாடினார்கள். லண்டன் பட்டணம் முழுதும் ஒரு பெரிய விருந்து சாலையை ஒத்திருந்தது. வீதிகள்தோறும் தோரணங்களும், கொடிகளும் கட்டப்பட்டு, மத்தாப்பு வேடிக்கைகளும், பாணவேடிக்கைகளும் வெகு விநோதமாக நடந்தன. மகா இராணியாரவர்கள் தமது உருவம் பதிந்திருந்த 72 மோதிரங்களைத் தம்முடைய இஷ்டர்களுக்குக் கொடுத்தருளினார்கள். பிரிட்டிஷ்நாடெங்கும் ஜனங்கள் இந்தச் சுபதினத்தை விடுமுறை நாளாகக்கொண்டு களிகூர்ந்திருந்தார்கள்.

சில நாள்களுக்குப் பிறகு பார்லமென்ட் சபையார் மகா இராணியாரவர்களுடைய நாயகர் "ஹிஸ் ராயல் ஹைனெஸ்" என்னும் பட்டம்பெற்று, இங்கிலிஷ் ராஜ சின்னங்களைத் தரிக்கலாமென்றும், பிரிட்டிஷ் இராச்சியத்தில் ஜனங்கள் இராணியாருக்கு மரியாதை செய்த பின்பு மற்றக் கனவான்களுக்குமுன் இராணியாருடைய நாயகருக்கு உபசாரம் செய்யவேண்டுமென்றும் கட்டளையிட்டு, அவருடைய மனவர்த்தனைச் செலவுக்காக

வருஷத்தில் 3,00,000 ரூபாய் துரைத்தனப் பொக்கிஷத்திலிரு ந்து கொடுத்துக்கொண்டுவரவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

புத்திரோற்பத்தி.

மகா இராணியாரவர்கள் நம்பியிருந்தவண்ணமே, இந்த விவாகம் இராணியாரவர்களுடைய குடும்ப சௌக்கியத்திற்கும், அவர்களுடைய குடிகளுடைய க்ஷேமத்திற்கும் அனுகூலமாக வே முடிந்தது. தேவானுக்கிரகத்தினால் 1840ம் வருஷம் நவம்பர்மீ 21வ இராணியாரவர்களுக்குப் புத்திரசந்தான சாம்பிராச்சியம் உண்டாயிற்று. அன்றையத்தினம் அவர்களுடைய ஜேஷ்ட புத்திரியாகிய விக்டோரியா ஆடிலேட் மராயா லூயிஸா என்பவர்கள் பிறந்தார்கள். இவர்களை ஜர்மனி தேசத்துச் சக்கரவர்த்தியின் ஜேஷ்ட குமாரனாகிய பிரின்ஸ் உல்லியம் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்திருக்கிறது. அவர்களுக்கு இரண்டு மாதங்களுக்குமுன் பிறந்த குழந்தையோடு, ஏழு பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள்.

1841ஹு.ம் நவம்பர்மீ 9வ மகா இராணியாரவர்களுடைய பட்டத்திற்குப் பிள்ளை பிறந்தது. அவருக்கு ஆல்பெர்ட் எட்வர்ட் என்று நாமகரணஞ்செய்து புத்திரோற்சவம் கொண்டாடினார்கள். இந்த ராஜகுமாரனைப் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்றுஞ் சொல்லுவார்கள். இந்த ராஜபுத்திரன் பிறந்த சிலநாள் பொறுத்து பார்லமெண்ட் சபைகூடினபோது, மகா இராணியாரவர்கள் சபையாரைநோக்கி, "எனது இல்வாழ்க்கையின் இன்பத்தைச் சம்பூரணப்படுத்தத்தக்க புத்திரபாக்கியம் கிடைத்ததற்காகத் தேவனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரங்களை உங்கள் சமுகத்தில் பிரசித்தமாய்ச் செலுத்தவேண்டியது என்க

டமை என்று உணருகிறேன்" எனத் தெரிவித்தார்கள். இந்த ராஜ புத்திரர் டென்மார்க் தேசாதிபதியின் குமாரத்தியாகிய அலெக் ஸான்ட்ரா என்பவர்களை விவாகஞ் செய்துகொண்டார். இவர்களு க்கும் தேவகடாக்ஷத்தினுல் ஆறு பிள்ளைகள் பிறந்திருக்கிறுர்கள்.

1843-ம் ௵ ஏப்பிரல்மீ 25ல மகா இராணியாரவர்களுக்கு ஆலிஸ் மாட் மேரி என்னும் குமாரத்தி பிறந்தார்கள். இவர் களை ஹெஸி நாட்டின் ராஜகுமாரனுகிய பிரின்ஸ் பிரெட்ரிக் லூயி என்பவருக்குக் கலியாணஞ்செய்துகொடுத்திருக்கிறது. இவர்களுக்கும் ஐந்து பிள்ளைகள் உண்டு.

டியூக் ஆப் எடின்பரோ.

1844-ம் வருஷம் ஆகஸ்டுமீ 6ல மகா இராணியாரவர்க

ளுக்கு இன்னுமொரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு ஆல்ப்ரெட் அர்னெஸ்ட் ஆல்பெர்ட் என்று பெயரிட்டார்கள். அவர்களை இப்பொழுது டியூக் ஆப் எடின்பரோ என்றும் சொல்லுவதுண்டு. இவர்கள் இங்கிலிஷ் போர்க்கப்பல்களில் உத்தியோகஞ் செய்துகொண்டுவருகிறார்கள். இரண்டு வருஷங்களுக்குமுன், நம்முடைய தேசத்திற்கு வந்து பங்காளம், பம்பாய்முதலிய இடங்களைப் பார்வையிட்டுக்கொண்டு, இந்தச் சென்னமாநகரத்திற்கும் விஜயஞ்செய்து, வெகு ஜனங்கள் கண்டு களிக்கும்படியாகத் தரிசனையளித்துவிட்டுப் போனவர்கள் இந்த ராஜ குமாரனவர்களே. இவர்களுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை.

1846-ம் வருஷம் மேமீ 25உ ஹெலினு அகஸ்டா விக்டோரியா என்னும் குமாரத்தி மகா இராணியாரவர்களுக்குப் பிறந்தார்கள். இவர்களை ஷ்லூஸ்விக் ஹால்ஸ்ட்டீன் என்கிற நாட்டின் ராஜகுமாரனுகிய பிரின்ஸ் பிரெட்ரிக் என்பவருக்குக் கொடுத்திருக்கிறது. இவர்களுக்கும் நான்கு பிள்ளைகள் உண்டு.

1848-ம் வருஷம் மார்ச்சுமீ 18உ மகா இராணியாரவர்களுக்கு மற்றொரு குழந்தை பிறந்தது. அவர்களை லூயிஸா காரொலைனு ஆல்பெர்ட்டா என்று சொல்லுவார்கள். இந்த ராஜபுத்திரியை இப்பொழுது இந்தியா துரைத்தனக்காரியங்களைப் பார்த்துக்கொண்டுவருகிற மந்திரியாகிய டியூக் ஆப் ஆர்கைல் என்பவருடைய குமாரராகிய மார்குவிஸ் ஆப் லாரன் என்பவருக்கு விவாகஞ் செய்துகொடுத்து ஒரு வருஷம் ஆகிறது. இவர் ஸ்காட்லாண்டு தேசத்துப் பிரபுக்களில் ஒருவருடைய குமாரராய் இருந்தாலும், ராஜகுடும்பத்திற்குத் தாழ்ந்த அந்தஸ்துடையவராய் இருந்தமையால், இந்த விவாகத்தினிமித்தம் மகா இராணியாரவர்கள் சட்டமொன்று நிரூபிக்க வேண்டியதாய் இருந்தது. இதனுலேயே மகா இராணியார

வர்களிடத்தில் வேற்றுமை பாராட்டும் குணமில்லை என்பது விளங்குகின்றது. குணம் எங்கேயோ அங்கு மதிப்பும், தவிப்பு எங்கேயோ அங்கு இரக்கமும் செலுத்துவது இராணியாரவர்களுக்குச் சுபாவம். இந்த மருமகன் குழந்தையாயிருக்கையில்தானே இராணியாரவர்களுக்கு இவரிடத்தில் பிரீதி உண்டாயிருந்தது.

1850-ம் வருஷம் மேமீ 1வ ஆர்த்தர் உல்லியம் ப்ரெடரிக் ஆல்பெர்ட் என்னும் ராஜபுத்திரர் இராணியார் அவர்களுக்குப் பிறந்தார். இவர்கள் அளவு சாஸ்திரங்களைக் கற்று, என்ஜினீர் தொழிலில் வித்பத்தியடைந்து வருகிறதாகச் சொல்லுகிறார்கள். இவர்கள் இரண்டுவருஷகாலம் இத்தேசத்திலும் வந்திருந்து வாசம் பண்ணப்போகிறதாகப் பிரஸ்தாபம்.

1853-ம் வருஷம் ஏப்பிரல்மீ 7வ லீயோபால்ட் ஜார்ஜ் டங்கன் ஆல்பெர்ட் என்கிற ராஜபுத்திரனும், 1857ஷும் ஏப்பிரல்மீ 14வ பியாட்ரிஸ் மேரி விக்டோரியா என்னும் ராஜபுத்திரியும் பிறந்தார்கள். இவர்கள் இன்னும் அதிபாலியராகையால் மகா இராணியாரவர்களிடத்தில்தானே இருக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்டிருக்கிறபடி மகா இராணியாரவர்களுக்கு 4 புத்திரர்களும், 5 புத்திரிகளும், 22 பேரன் பேத்திகளும் பிறந்திருக்கிறார்கள். இந்தப் பிள்ளைகளால் சூழப்பட்டு மகா இராணியார் பவனிவருகையில் அதிக கெம்பீரமாகக் காணப்படுவார்களல்லவா?

இராச்சிய பரிபாலனம்

இந்தச் சிறு புத்தகத்தில் இவர்களுடைய இராச்சிய பரிபாலனப் பிரதாபங்களை எடுத்துரைக்க இடமில்லை. அவற்றை எடு

த்துரைக்கவேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல. அவற்றை எடுத்துரைக்கவேண்டியபடி எடுத்துரைப்பது எனக்கு முடியாதகாரியம். ஆகிலும் எனது சகோதரிகள் மகா இராணியாரவர்கள் அரசுபுரியும் விதத்தைப்பற்றிச் சிறிது அறிந்துகொள்ள விரும்புவார்களாகையால், இரண்டொரு விசேஷங்களை மாத்திரம் இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கலாம்.

நம்முடைய தேசத்தில் அரசாண்ட ராஜாக்களில் அனேகர் தங்கள் இராச்சியங்களை மந்திரிமார் கையில் ஒப்புவித்துவிட்டு, அவை எந்தக்கேடுகெட்டாலும் விசாரமில்லாமல், உண்டு உடுத்து சுகித்திருப்பதே ராஜதருமம் என்றெண்ணி இருந்து விட்டதுபோல இருந்துவிடாமல், மகா இராணியாரவர்கள், தமது ராஜாங்கத்தை மிகவும் சிறப்பாக நடத்திக்கொண்டு போகத்தக்க மந்திரிகளும் பிரதானிகளும் பலர் இருந்தபோதிலும், தாமே நேரில் ஒவ்வொரு காரியத்தையும் சோதித்துப்பார்த்து, மந்திரிமார்கள் சொல்லும் யுக்தாயுக்தங்களையும் யோசித்து முடிவுசொல்லுவார்கள். பிரிட்டிஷ் ராஜாங்க ஏற்பாட்டின்படி ஒருவரோடு யுத்தத்திற்குப்போகவும், சமாதான உடன்படிக்கைகள் செய்யவும், குற்றவாளிகளை மன்னிக்கவும், பார்லமென்ட் என்னும் மகா சபையைக் கூட்டவும், அதனைக் கலைக்கவும், சட்டங்கள் ஏற்படுத்தவும், நாணயங்களை அடிப்பிக்கவும், தமது குடிகளுக்குப் பிரபுத்துவப்பட்டங்களை அளிக்கவும், இராணியாரவர்களுக்கு அதிகாரமுண்டு. இத்தனை காரியங்களையும் இராணியார் இதர நாட்டு அரசரும், தம்முடைய குடிகளும் பார்த்து வியப்புறும்படிச்செய்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். பார்லமென்ட் என்னும் சபையாரை நடத்திக்கொண்டு போகிறது இலேசான காரியமல்ல. இங்கிலிஷ் ராஜாக்களிலேயே சிலர் இந்தப் பார்லமென்ட் சபையாரை நடத்தமாட்டாமல் வருந்தினார்களென்றால், இவர்களை நம்முடைய மகா இரா

ணியாரவர்கள் நடத்திக்கொண்டுபோகிறது ஆச்சரியமல்லவா? ராஜாங்க காரியங்களில் மிகுந்த கவலையும், நேர்மையும், தெளிந்த புத்தியும் இல்லாவிட்டால், இப்படிச்செய்வது வருத்தமாயிருக்கும். நம்முடைய இராணியாரவர்கள் இந்தப்பூலோகத்தில் தினந்தோறும் நடக்கிற சவிஸ்தாரங்களைத் தெரிந்துகொண்டு, அங்கங்கே ராஜாக்களுக்குள் நடந்துவருகிற விவாதங்களையும், குடிகளுக்குள் உண்டாயிருக்கிற குழப்பங்களையும், கல்வி விர்த்தி, சாஸ்திரப்பயிற்சி, ஆயுத உற்பத்தி, வேளாண்மை, வர்த்தகச்சிறப்பு முதலியவற்றையும் வெகு நுட்பமாய் ஆராய்ந்தறிந்து, அவற்றால் தமது குடிகளுக்கு உண்டாகக்கூடிய அநுகூலங்கள் இவை யென்று திட்டமாய்க் கிரகித்து, அவற்றையெல்லாம்பற்றி மந்திரிகள் பிரஸ்தாபிக்கும் சமயங்களில் அவ்விஷயங்களில் தமக்குத் தெரிந்தவற்றைச் சொல்லும் திறமையும், அடக்கமும், அன்பும் உடையவர்களாய் இருக்கிறபடியினால்தான் மந்திரி பிரதானிகளும், மற்றச் சபையாரும் இராணியாரவர்களிடத்தில் ராஜவிசுவாசமுடையவர்களாய், இங்கிலிஷ் ராஜாங்கம் நாளுக்குநாள் விர்த்தியாகி புகழ் பெற்றோங்கி விளங்கும்படி முயற்சிசெய்துகொண்டு வருகிறார்கள்.

இதுவுமன்றி மகா இராணியாரவர்களுடைய மெய்த்தேவபக்தியே இவர்களுடைய இராச்சிய பரிபாலனத்திற்குப் பேருதவியாயிருக்கின்றது. ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள அரசர்களில் ஒருவர் மகா இராணியாரவர்களிடத்திற்குத் தமது தூதுவரை அனுப்பி, விலையுயர்ந்த காணிக்கைகளை இராணியாரவர்களுக்குச் சமர்ப்பித்து, இங்கிலிஷ் ராஜாங்கம் இப்படி இவ்வுலகத்தில் சிறந்தோங்குவதற்கு முகாந்தரம் என்னவென்று தெரிந்துகொண்டு வரும்படியாகச் சொன்னார். அவர்கள் அப்படியே மகா இராணியாரவர்களை அடுத்துத் தங்களு

டைய இராச்சியம் இவ்வாறு செழித்தோங்குவது எதினலே என்று தெரிந்துகொண்டு வரும்படியாக எங்கள் ராஜன் கட்டளையிட்டனுப்பினர் என்று சொல்லவே, மகா இராணியாரவர்கள் தாம் கைப்பற்றிஇருக்கிற வேதாகமத்தின் பிரதிகளில் ஒன்றை எடுத்து அவர்கள் கைகளில் கொடுத்து, இதைக்கொண்டுபோய் உங்கள் ராஜனிடத்தில் கொடுத்து, என் இராச்சியம் செழித்தோங்குவதற்குச் சூக்ஷ்மம் இதிலிருக்கிறதாகச் சொல்லுங்கள் என்று கட்டளை யிட்டார்கள். இந்தப் பக்திதான் இவர்கள் அடைந்திருக்கும் சிறப்புக்கு மூலாதாரம். உலகத்தில் சிறுமை வந்தபோது தேவனைத் துதித்தலும், பெருமை வந்தபோது அவரை அவமதித்தலும் வழக்கமாயிருக்கிறது. நம்முடைய இராணியாரவர்களுக்கு யாதொரு குறைவுமில்லாமல், தேவகடாக்ஷத்தினல் அஷ்ட ஐசுவரியங்களும் வாய்த்திருந்தபோதிலும், தேவனையும், அவருடைய நிபந்தனைகளையும் மறக்கிறதில்லை. ஒருநாள் மகா இராணியாரவர்களுடைய மந்திரிமார்களில் ஒருவர் மிகவும் ஆவசியகமான ராஜாங்க விஷயங்களைப்பற்றி மகா இராணியாரவர்களிடத்தில் ஆலோசனை செய்யும்படியாக வந்திருந்தார். அது சனிக்கிழமை இராத்திரியாயிருந்தது. மந்திரி இராணியாரைத் தரிசித்தவுடனே, மாக்ஷிமை பொருந்திய இறைவியே! தாங்கள் சில முக்கியமான தஸ்துவேசுகளைப்பார்த்து உத்தரவு செய்யவேண்டியிருக்கிறது; அவற்றை இதோ கொண்டுவந்திருக்கிறேன்; ஆகிலும், இப்பொழுது நேரமாய்விட்டபடியினல் அவற்றைப்பார்க்கும்படித் தங்களைத் தொந்தரவுசெய்ய எனக்கு மனதில்லை; நாளை யுதயத்தில் அவற்றைப்பார்த்து உத்தரவுசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்ருர். மகா இராணியார் நாளை யுதையத்திலேயா நான் அவற்றைப் பார்க்கவேண்டும்; நாளையத்தினம் ஓய்வுநாளல்லவா என்ருர்கள். அவர் தாங்கள் சொல்வது மெய்

தான்; ஆயினும் இந்த ராஜாங்க காரியத்தைக் காலதாமசமின்றிச் செய்யவேண்டியிருக்கிறது என்றார். இராணியாரவர்கள் அது முக்கியமானதென்று எனக்குத் தெரியும், தாங்கள் சிறிது பொழுதிருக்கும்போதே வந்திருந்தால், அந்தவேலையை இப்பொழுதே பார்த்திருக்கலாம்; ஆகிலும் ஆவசியகமானதாகையினாலே நாளையத்தினம் நான் தேவாலயத்திற்குப்போய்வந்தவுடனே இது காரியத்தைப் பார்ப்போம் என்றார்கள். ஓய்வுநாள் காலையில் இராணியாரவர்கள் தேவாலயத்திற்குத் தமது பரிஜனங்களோடு போயிருந்தார்கள். அந்த மந்திரியும் அங்கே வந்திருந்தார். அன்றையத்தினம் தேவாராதனையை நடத்தின குரு ஓய்வுநாளில் லௌகிக வேலைகளைச் செய்யாமல், பகவத்தியானம் செய்யவேண்டும் என்னும் விஷயத்தைப் பலவிதமாய் வற்புறுத்திப் பிரசங்கஞ்செய்தார். மந்திரிக்குத் திடுக்கிட்டது. தேவாலயத்திலிருந்து வந்தவுடனே இராணியாரவர்கள் அந்த மந்திரியைப்பார்த்து இன்றைக்குப் பிரசங்கம் எப்படியிருந்தது என்று கேட்டார்கள். அவர் அது வெகு நேர்மையாகவும் ஆத்துமாக்களுக்கு நன்மைசெய்யத்தக்கதாகவும் இருந்தது என்றார். இராணியாரவர்கள் நான்தான் இராத்திரி தாங்கள் இங்கிருந்து போய்விட்டஉடனே இந்த விஷயத்தைப்பற்றிப் பிரசங்கஞ் செய்யும்படியாக அந்தக் குருவைக் கேட்டுக்கொண்டேன்; அந்தப் பிரசங்கத்தின்படி நாம் எல்லோரும் நடந்தால் சுகிர்தமாயிருக்கும் என்றார்கள். அன்று முழுதும் அந்த மந்திரி இராணியாருடைய சமுகத்திலிருந்தும் அவர் வந்தகாரியத்தைப்பற்றி மறுபடியும் பிரஸ்தாபம் செய்யவேயில்லை. இராத்திரி போசனஞ் செய்தான்பிறகு இராணியாரவர்கள் அந்த மந்திரியை நோக்கி, நாளை காலையில் தாங்கள் கொண்டுவந்திருக்கிற தஸ்துவேசுகளைப்பார்ப்போம்; தாங்கள் எப்பொழுது கொண்டுவந்தாலும் வரலாம்; 7-மணிக்கே வந்தாலும் எனக்கு இஷ்டந்தான் என்

ளூர்கள். மந்திரி அவ்வளவு காலையில் வந்து தங்களுக்குச் சிரமை கொடுக்க எனக்கு இஷ்டமில்லை; 9 - மணிக்குத் தாங்கள் தயைசெய்து பார்த்தால் போதுமானது என்ளூர். இராணியார் அப்படியல்ல; அந்தக் காரியம் முக்கியமானதாகையால், அதைக் காலதாமசமின்றிப் பார்த்து முடிவுசெய்ய விரும்புகிறேன்; ஆகிலும் தாங்கள் 9 - மணிக்கு வரவேண்டுமென்று விரும்பினுல், அப்படியே வரலாம் என்று சொன்னூர்கள். மறுநாள்காலையில் அந்த 9 - மணிக்கு இராணியார் தமது மேஜையினிடத்தில் உட்கார்ந்து அந்த மந்திரியின் வரவை யெதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தார்கள். மந்திரி வந்த உடனே அவர் கொண்டுவந்திருந்த தஸ்துவேசுகளைப் பார்த்துச் செய்யவேண்டியிருந்த உத்தரவைச் செய்தனுப்பினூர்கள். மந்திரி இராணியாரிடத்தில் அன்று கற்றுக்கொண்ட புத்தியை எளிதில் மறக்கமாட்டார் அல்லவா?

குடும்பபரணம்.

இது பெரும்பாலும் இராணியாரவர்களது அரண்மனையின் அந்தப்புரத்தைச் சேர்ந்த விஷயமாதலால் இதைப்பற்றிப் பகிரங்கமாய் விசேஷம் பிரஸ்தாபிக்கிறது யுக்தமன்று. ஆயினும் எனது சகோதரிகள் இதைப்பற்றியும் சிறிது தெரிந்துகொள்வது உபயோகமாயிருக்குமென்றெண்ணி, இரண்டொரு விஷயங்களைமாத்திரம் எடுத்துரைக்கத் துணிகின்றேன்.

மகா இராணியாரவர்களுடைய குடும்பம் சாமானியமானதல்ல; அது மிகவும் பெரிது. அதில் நெருங்கிய பந்துஜனங்களுக்கும், வருவார் போவாருக்கும் குறைவில்லை. ஏவலாட்களும், சிப்பந்திகளும் அநந்தம் பெயர். இவ்வளவு பெரிய குடும்பத்தை ஒழுங்காக நிர்வாகஞ் செய்துகொண்டுபோவது எவர்க

ளுக்கும் வருத்தமாகவே இருக்கும். பலவிதமான குணாதிசயங்களையும், நடை நொடிபாவனைகளையுமுடைய குடும்பத்தாரை உபசரித்துச் சந்தோஷப்படுத்துவது இலேசான காரியமல்லவென்று சம்சாரஞ்செய்து வருகிறவர்களுக்கு நன்குவிளங்கும். மகா இராணியாரவர்களுக்கு ராஜாங்கத்தைச்சேர்ந்த வேலைகள் அநந்தம் உண்டாயிருந்தபோதிலும், தமது குடும்பத்தின் காரியங்களையும் இல்லறத்திற்குப் பழுதில்லாமல் அணிபெறச் செய்து நிறைவேற்றவேண்டியது தம்முடைய கடமையே என்று உணர்ந்து, தாமே சகல காரியங்களையும் பார்த்துவருகிறது வழக்கம். தமது குடும்பத்தின் கௌரவத்திற்குத் தக்கபடி தமது சுற்றத்தாரையும், வருவார் போவாரையும் வெகு அன்பாயும், கரிசனையாயும் உபசரித்து, அவர்களுக்கு யாதொரு குறைவுமில்லாமல் ஆதரித்துக்கொண்டுவந்தபோதிலும், சில ராஜாக்களும், மற்றவர்களும் தங்கள் வருமானத்திற்குமேல் செலவுசெய்கிறது போல் தாம் செய்யாமல், முன்பின் யோசித்து, வெகு சிக்கனமாகவே சம்சாரகாரியங்களையெல்லாம் நடத்திக்கொண்டு வருவார்கள். ஷாப்புகளுக்குப்போய் தமக்காவது, தமது குடும்பத்தாருக்காவது துணிமணிகளை வாங்கும்போதும், அரண்மனைக்கு வேண்டிய பண்டம் பலகாரங்களை வாங்கும்போதும் அதன் அதன் விலையைக் கண்டிப்பாய் முன்னமே தெரிந்துகொண்டு, தமக்கு வேண்டிய அளவு வாங்குவார்கள். மேலும் தமக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் வர்த்தகர்களுக்குக் கெடுவுதவறாமல் பணத்தைச் செலுத்திவிடுவார்கள். இந்த இரண்டு வழக்கங்களும் பல சங்கடங்களிலிருந்து காக்கும். இவற்றை நாமும் அனுசரித்து நடப்போமானால் நலமாயிருக்கும்.

மகா இராணியாரவர்கள் மண்டலேசுவரியா யிருக்கிறதற்குத் தமது இஷ்டப்பிரகாரம் எப்படி நடந்தாலும் நடக்கலாம். மிகுந்த செல்வத்தில் பிறந்து, சிறந்த கிரீடத்தை யணிந்தவராய் இரு

ந்தபோதிலும், "மலையிலே விளைந்ததானாலும், உரலிலே வந்து மசியவேண்டும்" என்பதற்குச் சரியாகத் தமது நாயகருக்கு அடங்கி, அவர் இஷ்டத்தைச் சிரமேல்கொண்டு நடப்பார்கள். தமக்காகவே உற்றார், பெற்றார், உறவினரையும், சுதேசத்தையும் துறந்து வந்துவிட்ட தமது நாயகருக்கு யாவும் தாமாகி, தமது அன்பினாலும், அத்தியந்த பக்தியினாலும் அவரை அனவரதமும் பேணி, அவர் கருத்துக்கிசைந்து, ஊசியின் சரடுபோல நடந்துகொள்வார்கள். மகா இராணியாரவர்கள் தமக்கு விவாகமாவதற்குமுன் லண்டன் நகரத்திலுண்டாயிருந்த வேடிக்கைகளையும், ஆடம்பரங்களையும் பார்த்து, அவ்விடத்தில்தானே வாசஞ்செய்ய அபேக்ஷித்திருந்தார்கள். லண்டன் நகரத்தைவிட்டு வேறோரிடத்திற்கு இரண்டொருநாள் போயிருக்கவும் சம்மதிக்கமாட்டார்கள். அப்படிக்கிருந்தும், விவாகமானபிறகு தமது நாயகர் லண்டன் பட்டணத்திற்கு இயல்பான அமளியையும், நாற்றத்தையும், புகையையும் பார்த்துச் சகிக்கமாட்டாமல், அந்நகரத்தைவிட்டுச் சமீபத்தில் வேறோரிடத்தில்போய் வாசம்பண்ண விரும்பினதை மகா இராணியாரவர்கள் அறிந்து, லண்டன் நகரத்தில் வாசம்பண்ணுவது எனக்கு இஷ்டமாயிருந்தாலும், எனக்கு எல்லாச் சம்பத்துமாயிருக்கிற என் பிராணநாயகருடைய இஷ்டத்திற்கிசைந்து நடப்பதே மேலான இன்பத்தையும், சுகத்தையும் தரத்தக்கதாகையால், அவருக்கு எந்த இடத்தில் போயிருக்கப் பிரீதியோ, அந்த இடத்தில் நானும் போயிருப்பேனென்று சொல்லி லண்டன் நகரத்தைவிட்டு நீங்கத் தீர்மானித்தார்கள். அது முதல் லண்டன் நகரத்திற்குப்போகவேண்டுமென்றால், இராணியாரவர்களுக்கு மிகவும் வெறுப்பாயிருக்கும். ராஜாங்க விஷயமாய் அந்நகரத்திற்குப்போகும்படி நேரிடும்பொழுதும் தம்முடைய நாயகரும் கூடவந்தாலன்றி, அந்த நகரத்தில் சிறிதுநேரமும் தங்கித் தரித்திருக்கமாட்டார்கள்.

இராணியார்.

சிலர் இராணியாரவர்கள் தமது நாயகரை மேன்மையாகப் பாவித்து, பக்திவிநயத்தோடு அவருக்குக் கீழமைந்து அன்பு பாராட்டிவருவதைக்கண்டு, "தாங்கள் இந்தப் பிரிட்டிஷ் இராச்சியத்திற்கு அரசியாய் இருக்கிறதுபோலவே தங்களது குடும்பத்திற்கும் தாங்களே அரசியாக இருக்கவேண்டியது முறைமையாகும். தங்களுடைய கணவராகிய ராஜகுமாரன் மற்றக் கனவான்களைப்போலத் தங்கள் குடிஜனத்தில் ஒருவரேயன்றி வேறல்லர். அவருக்குத் தாங்கள் இவ்வாறு பயந்து நடப்பது தகுதியல்ல" என்று சொல்லத்துணிந்தபோது, மகா இராணியாரவர்கள் திடுக்கிட்டு, மனம் வருந்தி "நான் விவாகஞ்செய்துகொண்டபோது குருபீடத்திற்கு முன்பாக நின்று, எனது பிராணநாயகருக்குக் கீழமைந்து நடந்து, அவரை மேன்மைப்படுத்தி அன்புசெய்வேன் என்று பிரமாணஞ்செய்துகொடுத்திருக்கவில்லையா? அந்தப் பிரமாணத்தின்படி நடப்பதே அழகு. சாக்குப்போக்குகள் சொல்லி அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது பாவமாகும். ஆகையால், இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை இனியொருக்காலும் என்னிடத்தில் சொல்லாதேயுங்கள்" என்று கட்டளையிட்டனுப்பினர்கள். இதனாலேயே மகா இராணியாரவர்களுடைய இல்வாழ்க்கையின் தன்மையை நன்கு அறியலாம். தம்முடைய நாயகரிடத்தில் இவ்வளவு அன்பும், அடக்கமும் உடையவராக நடந்தொழுகினதுமன்றி, தமது மாமனர், மைத்துனர் முதலான பந்துஜனங்களிடத்திலும் இங்கிதமறிந்து, வெகுபக்ஷமும், கரிசனையும் உடையவர்களாய் நடந்து, அவர்கள் கண்ணுக்குக் கண்ணாயிருப்பார்கள்.

தமது பிள்ளைகளில் ஒவ்வொருவரையும் பரமஜாக்கிரதையாக வளர்த்தெடுத்து, அவர்களுக்கு நற்குண நற்செய்கைகளைப் பயிற்றுவித்து, அவர்கள் தேவனிடத்தில் பக்தியும், உயிர்களிடத்தில் அன்பும் உள்ளவர்களாய் நடக்கும்படி நயத்திலும், பயத்தி

லும் போதித்து வருவார்கள். இத்தேசத்தில் சில ராஜாக்களும், கனவான்களும் தங்கள் பிள்ளைகளைச் சிறுபோதே சீர்ப்படுத்தாமல், அவரவர்கள் இஷ்டப்படி நடக்கவும், சிற்றின்பப் பிரியராய்த் திரிந்து கெடவும் விட்டிருக்கிறதுபோல் விடாமல், இந்தப் பிள்ளைகள் தேவானுக்கிரகத்தினால் தமக்குண்டாயிருக்கும் பெருமையையும், அந்தஸ்தையுமே சதம் என்று எண்ணாமல், அவரவர்கள் கஷ்டப்பட்டுக் கல்வி கற்கவும், சாஸ்திரப்பயிற்சியடையவும் செய்து, அவரவர்களுக்கு வயதுவந்தவுடனே ஓர் உத்தியோகத்தை ஏற்பாடுசெய்துகொடுத்து, அதனைச் சீராகச்செய்து, பெயரும் கீர்த்தியும் அடையவேண்டுமென்று பழக்கிவைத்திருக்கிறார்கள். பிள்ளைகளிடத்தில் அன்பும், ஆசையும் மிகுந்தவர்களாக இருப்பினும், அவர்களிடத்தில் துர்க்குணங்களைக் காணும் பொழுது மிகவும் உருக்கமாய்க் கண்டிக்காமல் விடுகிறதில்லை என்பதற்கு அடியில் கூறப்படுகிற வர்த்தமானங்களே திருஷ்டாந்தங்களாகும்.

மகா இராணியாரவர்களுடைய குமாரர்களில் ஒருவர் உபாத்தியாயர் சொற்படி பாடங்களைக் கற்காமல் அஜாக்கிரதையாயிருந்த செய்தி இராணியாருக்குத் தெரிந்தமாத்திரத்தில், அவரை வரவழைத்து, அவர்மேல் இருந்த குற்றத்தைத் தெரியப்படச்சொல்லி, அவரைத் தண்டிப்பதினால் தமக்கு மிகுந்த துயரம் உண்டானபோதிலும், அவர் சீர்ப்படுவதற்காகத் தண்டிக்கவேண்டி இருக்கிறதென்று சொல்லி, தமது நாயகரைக்கொண்டு அவரை அடிக்கவேண்டிய அளவு அடிப்பித்தே விட்டார்கள். அப்படியே அவர்களுடைய குமாரத்திகளில் ஒருவர் தப்பிதஞ் செய்யக் கண்டு, அவர்கள் அந்தத் தப்பிதத்தை யுணர்ந்து, அதற்காக விசனமடையும்பரியந்தம் ஒரு மூலையில் நிற்கப்போட்டுவைத்தார்கள்.

"பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான். அவ

ன்மேல் அன்பாயிருக்கிறவனே அவனைப் பாலியத்திலேயே தண்டிக்கிறான்," என்னும் வேதவாக்கியத்தின் பொருளைத் தாயும் தகப்பனும் நன்கு உணர்ந்து, பிள்ளைகளிடத்தில் மெய்யான அன்பிருந்தால், அவசியமானபொழுது, அவர்களைக்கண்டிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தபோதிலும், பிள்ளைகளிடத்தில் பெரும்பாலும் அன்பாகப்பேசியே ஆளுவது அவர்களுக்கு வழக்கம். இதனால் இவர்களுடைய குடும்பத்தில் அன்பும் ஆசையும் மிகுந்திருக்கிறதுபோல வேறொரு குடும்பத்திலிருப்பது வருத்தம். மகா இராணியாரும், அவர்களுடைய நாயகரும், குமாரரும், குமாரத்திகளும் ஒருவருக்கொருவர் விசேஷ கரிசனமும், அன்பும் உடையவர்களாய்க் களிகூர்ந்து வாழ்வுற்றிருப்பது இங்கிலாண்டு தேசாதிபதியாகிய மகா இராணியாரவர்களுக்கு அழகாயிருப்பது மன்றி, அவர்களுடைய இராச்சியத்திற்கு உட்பட்டிருக்கும் குடிகள் யாவருக்கும் பெருமையாகவும் இருக்கின்றது.

ஜீவகாருணியம்.

இதுவரையில் நான் சொல்லிக்கொண்டுவந்த விஷயங்களை உற்றுணர்ந்தவர்களுக்கு மகா இராணியாரவர்களின் உசித குணங்களில் அனேகம் தெரிந்திருக்கலாம். மகா இராணியாரவர்களுக்கு ராஜாங்கத்தைச்சேர்ந்த கவலைகளும், குடும்பத்தைச்சேர்ந்த தொல்லைகளும் அநந்தம் உண்டாயிருந்தபோதிலும், அவர்கள் எளியோர் வறியோர்களுக்கு உபகாரஞ்செய்யப் பின்னிடுகிறதில்லை. ராஜீகதெய்வீகங்களினால் ஏழை ஜனங்கள் வருந்தும்போது, அவர்களுக்குச் சகாயஞ்செய்து, அவர்கள் வருத்தங்களை ஒழிக்க முந்தி கிருஷி செய்கிறவர்கள் மகா இராணியாரவர்களே. தமது சத்துருக்கள்மேல் படை எடுத்துப்போய், தூரதேசங்களில் போர்செய்கிற வீரர்களுக்குப் படைமுகத்தில் ஆபத்து வருங்காலத்

தில், அவர்களை ஆதரிக்கவும், அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யவும் தகுதியான சிப்பந்திகளை யேற்படுத்தி அனுப்புகிறது மன்றி, அவர்கள் ஆயாசத்தைத் தணிக்கத்தக்க சிற்றுணவுகளையும், கைக்குட்டைகள், குல்லாய்கள், துப்பட்டிகள் முதலான பற்பல உடுமானங்களையும் தமது அரண்மனையிலிருந்தே செய்து அனுப்புவார்கள்.

பிரவாகங்களினுலாவது, நிலக்கரிகனிகள் இடிந்துவிழுவதினுலாவது, இருப்புப்பாதைகளில் ஓடும் நீராவி வண்டித்தொடர்களுக்கு அபாயங்கள் நேரிடுவதினுலாவது, துன்பப்படுகிற ஜனங்களுக்குச் சகாயமாக மிகுந்த தனவிரயம் செய்வார்கள். இவர்கள் இவ்வாறு காலத்துக்குத்தக்க பேருதவிகளைச் செய்துகொண்டுவருகிறதுமல்லாமல், தாம் வாசம் பண்ணுகிற அரண்மனைகளுக்குச் சமீபத்தில் குடியிருக்கும் ஏழை ஜனங்களுக்கும் நாள்தோறும் அநந்தம் உபகாரங்களைச் செய்துகொண்டுவருகிறுர்கள். தள்ளாமையினுலும், நோய்நொடிகளினுலும், குளிரினுலும், பசியினுலும் சங்கடப்படுகிற ஏழை ஜனங்களிருக்கும் இடத்தை, அந்தந்தச் சேகரத்திலிருக்கும் குருமாரைக்கொண்டும், மற்றவர்களைக்கொண்டும் திட்டமாயறிந்துகொண்டு, அவர்களுக்கு வேண்டிய வஸ்திரம், உணவு, ஔஷதம், குளிர்காய நிலக்கரிமுதலியவற்றைத் தாமே கொண்டுபோய்க்கொடுத்து உதவுவார்கள். இவர்களில் எடுக்கப் பிடிக்கவும் ஆளில்லாமல் நிர்ப்பாக்கியராய்ச் சங்கடப்படுகிற நோயாளிகளுக்கு வேண்டிய பத்தியபரிகாரங்களைத் தமது அரண்மனையிலிருந்தே செய்துகொண்டுபோய்க் கொடுத்து, அவர்கள் அருகில் தாம் உட்கார்ந்து, அவர்களுக்கு ஆறுதலாக வேதவாக்கியங்களை வாசித்தும், பிரார்த்தனைகள் செய்தும் உபசரித்து, அவர்கள் சமீபத்தில் இருந்து உதவிசெய்யும்படித் தகுந்த வேலைக்காரரையும் நியமித்துவைப்பார்கள். இப்படித் தாம் போய் உதவிசெய்யும்பொழுது தம்மை இன்னுரென்று அங்

த ஏழை ஜனங்கள் தெரிந்துகொள்ளாமலிருக்கப் பெரும்பாலும் சாதாரணமான ஸ்திரீகளைப்போலவே உடுத்துக்கொண்டுபோவார்கள். ஏழை ஜனங்களைப்போய்க் காணும்போது "நீங்கள் படுகிற கஷ்ட நஷ்டங்களைப் பார்த்துக்கொண்டு வருகிற ஒருவர் இந்தப் பண்டங்களை உங்களுக்குக் கொடுத்தனுப்பினர்" என்றுசொல்லி, தாம் கொண்டுபோனவற்றைக் கொடுத்துவிட்டு வந்துவிடுவார்கள். இதனால் அந்த ஏழை ஜனங்கள் தாங்கள் எதிர்பார்க்காமலிருக்கையில், தாங்கள் முன்பின் அறியாத யாரோ ஒரு உத்தமியைக்கொண்டு இப்படித் தற்செயலாய், தமக்கு உதவிசெய்தருளிய இரக்கமுள்ள தேவனைத் தோத்திரஞ்செய்து வழிபடுவார்கள்.

மகா இராணியாரவர்கள் தாம் ஏழை ஜனங்கள் விஷயத்தில் கவலையுள்ளவர்களாய் இருக்கிறது போலவே தமது குமாரர்களும், குமாரத்திகளும், தம்மைச்சேர்ந்த மற்றவர்களும் எளியோர் வறியோர் விஷயத்தில் கவலையுள்ளவர்களாயிருக்கும்படிச்செய்வார்கள். மகா இராணியாரவர்களுடைய குமாரர்கள் தங்கள் தங்களால் இயன்றவரையில் ஏழைகளுக்கென்று காய்கறிகளைப் பயிர்செய்தும், குமாரத்திகள் உடுப்புமுதலியவற்றைத்தைத்தும் உதவப் பயின்றிருக்கிறார்கள். இந்தக் குமாரர்கள் குமாரத்திகளுடைய ஜனனோற்சவங்களைக் கொண்டாடும்பொழுதும், தம்முடைய ஜனனதினத்தையும் தம்முடைய நாயகருடைய ஜனனதினத்தையும் கொண்டாடும்பொழுதும் தமது அரண்மனைகளுக்குச் சமீபத்திலுள்ள எளியோர் வறியோரையும், அனாதை பிள்ளைகளையும் தமது இருப்பிடத்திற்கு வரவழைத்து, சம்பிரமமாய் விருந்துசெய்வித்து, அவர்களுக்குப் புது ஆடைகளைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தி அனுப்புவார்கள்.

மகா இராணியாரவர்கள் ஏழை ஜனங்களுக்கு உபகாரஞ்செய்துகொண்டுபோகையில், தம்மை அவர்களுக்குக் காட்டிக்கொள்

ளாமலிருக்க மிகவும் ஜாக்கிரதையாய்ப் பிரயத்தனப்பட்டபொழு திலும், அவர்கள் தங்களுக்கு இவ்வளவு பக்ஷமாய் உபகாரஞ்செய்து உதவுகிற உத்தமி தங்களுடைய மகா இராணியார் என்றே சிலசில சமயங்களில் அறிந்துகொண்டார்கள். ஒரு நாள் எளிய ஜனங்களை விசாரிக்கும்படிப்போயிருந்தபொழுது, தம்மை இன்னாரென்று அவர்கள் கண்டுபிடித்துக்கொண்ட விருத்தாந்தத்தை மகா இராணியாரவர்களே தாம் சில தினங்களுக்குமுன் அச்சிட்ட ஓர் புத்தகத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அதனை மொழிபெயர்த்து இதனடியில் கூறுகின்றேன்.

"எனது குமாரத்திகளில் இருவரையும், லேடி சர்ச்சில் என்னும் சீமாட்டியையும் கூட்டிக்கொண்டு, ஏழை ஜனங்களைப்பார்த்து விசாரிக்கும்படிப் போயிருந்தேன். வழியிலிருந்த ஒரு ஷாப்பில் அவர்களுக்கு உபயோகமான சில துணிதுப்புக்களை வாங்கினோம். அவர்கள் வாசஞ்செய்யும் இடங்களையும், அவர்கள் நேர்நிர்வாகங்களையும் நன்றாயறிந்திருந்த பார்குஹார்சன் அம்மாள் எங்களுக்கு வழிகாட்டிக்கொண்டுவந்தார்கள். வழியில் 88-வயதுள்ள ஒரு ஏழை மனுஷியைச் சந்தித்தோம். அவள் ஸ்திதி மிகவும் நிர்ப்பாக்கியமானதாயிருந்தது. அவளுக்குக் குளிர் நேரத்திற்கு உதவும் கம்பளிஆடை ஒன்று கொடுத்தேன். உடனே அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாகச் சொரிந்தது. அவள் என் கரத்தைப்பிடித்துக்கொண்டு "தங்களைத் தேவன் ஆசீர்வதிக்கவேண்டும்" என்று சொல்லி வந்தனம் செய்தாள். பிறகு 86-வயதுள்ள கிட்டி கியர் என்னும் ஒருத்தியைப்போய்ப் பார்த்தோம். அவள் எங்களுக்கு மரியாதைசெய்து, உட்கார்ந்து நூல் நூற்றுக்கொண்டிருந்தாள். அவளுக்கும் ஒரு கம்ப்ளிஆடையைக் கொடுத்தேன். "தேவன் தங்களையும், தங்களைச்சேர்ந்தவர்களையும் இப்பொழுதும் சதாகாலமும் ஆசீர்வதித்து, தங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமலிருக்கத் து

ணைசெய்வாராக" என்று ஆசீர்வதித்தாள். அப்பால் ஸைமன்ஸ் என்னும் விருத்தாப்பியமான ஒரு கைம்பெண்ணைப் போய்ப்பார்த்தோம். அவள் முதுகு முற்றிலும் வளைந்துபோயிருந்தது. எங்களைக் கண்டமாத்திரத்தில் மிகுந்த அன்பு பாராட்டி, எங்கள் கரங்களைப்பற்றிக்கொண்டு, உங்களில் மகா இராணியார் யாவர் என்று வினவி, "தேவன் தங்களுக்குச் சகல பாக்கியங்களையும் அளித்து, இம்மையில் தங்களோடிருந்து ரக்ஷித்துக்கொள்ளக் கடவர்" என்று பலபலவிதமாய் வாழ்த்தினாள். கூடவந்திருந்த எனது குமாரத்தியாகிய விக்டோரியா ஆடிலெயிட் என்பவருக்கு விவாகமாகப்போகிற சங்கதியைக்கேட்டு, ராஜபுத்திரியைப்பார்த்து, "தங்களுக்குத் தேவனே துணையாக இருந்து, சகல பாக்கியங்களையும் கிருபைசெய்து ஆளக்கடவர்" என்று ஆசீர்வதித்தாள். நான் மறுபடியும் வந்து உன்னைப்பார்ப்பேன் என்று சொன்னதைக்கேட்டு, "தேவன் என்னை எப்பொழுது அழைத்துக்கொள்வாரோ தெரியவில்லை; அவர் எப்பொழுது அழைப்பாரோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னாள். அங்கிருந்து அப்புறம் சிறிது தூரத்திலிருந்த வேறு ஆறு ஏழை ஜனங்களைப்போய்ப்பார்த்து விசாரித்தோம். திரும்பி வரும்போது கிராண்ட் என்னும் ஒரு தள்ளாத மனுஷியைக்கண்டு, அவளுக்கும் ஒரு ஆடையையும் கைக்குட்டையையும் கொடுத்தேன். "தாங்கள் என்னிடத்தில் எப்பொழுதும் பக்ஷமாகவே யிருக்கிறீர்கள். வருஷந்தோறும் தாங்கள் எனக்குச்செய்யும் உபகாரங்கள் அதிகப்பட்டுக்கொண்டேவருகின்றன. எனக்கும் வயது அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றது." என்று சொன்னாள். சிறிது நேரம் அவளிடத்தில் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்தேன். "தாங்கள் சௌக்கியமாயிருக்கிறதைக்காண என் மனம் பூரிக்கின்றது" என்று சொன்னாள். எனது குமாரத்தியின் விவாக சங்கதியைக்கேட்டு, அழுத கண்

ணோடு, "ராஜபுத்திரி நம்மை விட்டுப்போய்விடுகிறதற்காக நான் வருத்தப்படுகிறேன். அவர்களுக்கும் அது வருத்தமாகத்தான் இருக்கும்" என்று சொல்லி, ராஜபுத்திரியைப்பார்த்து, "நான் நினைக்கிறதைப்பேசுவது எனக்கு வழக்கம். நான் சொன்னதில் பிழையிருக்குமானால், மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றாள். இந்தப் பெரிய மனுஷி மிகுந்த அன்பும், குளிர்ந்த மனமும் குணமும் உடையவள்.

இந்த ஏழை ஜனங்களுடைய அன்பும், ஆசையும் சாதாரணமானவையல்ல. அவர்களுடைய குளிர்ந்த வாக்கைக் கேட்பவர்களுடைய உள்ளம் கல்லாயிருப்பினும் கரையும்."

நாலாறு மாதங்களுக்குமுன் மகா இராணியாரவர்களுடைய ஜேஷ்ட புத்திரரும், பிரிட்டிஷ் இராச்சியத்தின் இளவரசுமாகிய பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவர்களுக்கு பயங்கரமான விஷஜுரம் கண்டு பிராணவேதனையாயிருந்தது. வைத்தியர்கள் எல்லாம் அவர் பிழைக்கிறது அரிதென்று நிமிஷத்திற்கு நிமிஷம் கெடுவிட்டுக் கொண்டிருந்தார்கள். பட்டத்துக் குமாரராகிய ராஜபுத்திரருக்கு உண்டாயிருந்த பிராண சங்கடத்தையுணர்ந்த பிரிட்டிஷ் இராச்சியமெல்லாம் நடுக்கமுற்று, தேவனை நோக்கித் தங்கள் இளவரசுக்குத் தீர்க்காயுசு அளித்து, காத்து ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் மகா இராணியாரவர்களுடைய உள்ளத்திலுண்டாயிருந்த சஞ்சலத்தையும் கலக்கத்தையும் யூகித்துச்சொல்ல யாராலாகும். அதேகாலத்தில் இந்த ராஜபுத்திரருடைய ரதசாரதியாகிய சாரல்ஸ்

TAMIL NADU ARCHIVES LIBRARY No.

ப்ளெக் என்பவனுக்கும் இந்த விஷஜுரம் கண்டு வருத்தமுற்றிருந்தான். ஒரு ஓய்வுநாள் காலையில் ராஜகுமாரருக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. அது அவருடைய அந்திய தினமாயிருக்கும் என்று யாவரும் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். அன்றையத்தினம் தேவாலயங்கள்தோறும் ராஜகுமாரருக்காகப் பிரார்த்தனைகள் மிகுந்த பக்தியோடும் வைராக்கியத்தோடும் செய்யப்பட்டன. ராஜகுமாரருடைய மாளிகைக்குச் சமீபத்திலிருந்த சாட்ரீங்காம் தேவாலயத்தில் தொண்டுசெய்கிற குருவை மகா இராணியாரவர்கள் பிரார்த்தனை செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டபோது, தன் குமாரருக்காகமாத்திரம் பிரார்த்தனை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளாமல், "வியாதியாயிருக்கிற ஆல்பெர்ட் எட்வர்ட் என்னும் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவர்களுக்காகவும், சாரல்ஸ் ப்ளெக் என்பவனுக்காகவும் பிரார்த்தனைசெய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த மனம் யாருக்கு வரும்? தன் பிள்ளை அகோர ஜுரத்தில் அகப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கையில் மற்றொரு பிராணியைக்குறித்து நினைக்கவும் எம்போலியருக்கு எளிதில் வருமா? இதல்லவோ ஜீவகாருண்ணியம்! மகா இராணியாரவர்களது ஜீவகாருண்ணிய சிந்தையை விளக்க இந்த விருத்தாந்தம் ஒன்றுமே போதுமானது.

மகா இராணியாரவர்களைப்போலவே அவர்கள் பிராணநாயகராகிய ஹிஸ் ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆல்பெர்ட் அவர்களும் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதிச் செங்கோல் செலுத்துவதே மன்னர்க்கழகு என்று உணர்ந்து, ராஜகாரியங்களில் தாம் நேரே தலையிட்டுக்கொள்ளாவிட்டாலும், பிரிட்டிஷ் இராச்சியத்தில் கல்விகேள்விகளும், கைத்தொழில் வேளாண்மை சிற்பவேலை படமெழுதுதல் முதலியவைகளும் நாளுக்குநாள் விர்த்தியாகும் பொருட்டு, தம்மால் இயன்றவரையில் முயற்சிசெய்துகொண்டு வந்தார்கள். கல்வி, தெய்வபக்தி, நாகரீகம், வர்த்தகம், முத

V56, 127M09

லிய சகல காரியங்களிலும் மகா இராணியாரவர்களுடைய குடி ஜனங்கள் மேன்மையடையவேண்டுமென்பதே இந்த புருஷோத்தமருடைய முக்கிய நோக்கமாயிருந்தது. இது விஷயத்தில் இவர்கள் செய்த பல பிரயத்தனங்களுக்கு மான்செஸ்டர், கென்ஸிங்டன் முதலான இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சகல பொருட்காட்சிசாலைகளும், ஏழை ஜனங்களைப் படிப்பிக்கும் பொருட்டு அங்கங்கே ஏற்படுததப்பட்டிருக்கிற பல பாடசாலைகளும், ஜனங்களுடைய செளக்கியத்திற்காக உண்டாக்கப்பட்டிருக்கிற தடாகங்களும், நீரூற்றுகளுமே தகுந்த சாட்சிகளாக இருக்கின்றன. இவ்வுலகத்திலுள்ள நானாதேச விளைபொருள்களையும், கைத்தொழில்களையும் வரவழைத்து, இங்கிலிஷ் ஜனங்களுக்குக் காண்பித்தால் பயனுண்டாகுமென்று இவர்கள் யூகித்து, 1851-ம் ஹூ லண்டன் நகரத்திற்குச் சமீபத்திலிருக்கும் ஹைட் பார்க் என்னுமிடத்தில் வெகு விசித்திரவினோதமாய் பிரமாண்டமான மாளிகை யொன்றை பளிங்கினால் கட்டுவித்து, அதில் சகல பொருள் காட்சிசாலை யொன்றை ஸ்தாபித்தார்கள். இந்த மாளிகை முழுதும் இருப்புச் சட்டங்களினாலும், கண்ணாடியினாலும் கட்டப்பட்டது. இதனைக் கட்டிமுடிக்க 8,00,000 ரூபாய் பிடித்தது. இதன் நீளம் 1848 அடி; அகலம், அதிகங் கண்ட இடத்தில், 456 அடி; உயரம் 108 அடி. ஜனங்கள் பார்க்கும்படியாகப் பற்பல தேசங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட சகலமான பொருள்களுக்கும் இதில் போதுமானஇடம் இருந்ததுமன்றி, அந்தப்பொருள்களை ஏககாலத்தில் 1,00,000 ஜனங்கள் வரையில் கூடிவந்து பார்க்கவும் வசதியுண்டாயிருந்தது. இந்த

விசித்திரமான மாளிகையில் சகலபொருட்காட்சி சாலையை ஸ்தாபித்து, மகா இராணியாரவர்கள் கிரகப்பிரவேசம் செய்தபோது நடந்த வைபவங்களில் சிலவற்றை இவ்விடத்தில் பதித்திருக்கிற

பளிங்குமாளிகை.

படம் தெரிவிக்கின்றது. கிரகப்பிரவேசமானதுமுதல் இந்தச் சகல பொருட்காட்சி முடிகிறபரியந்தம் இதை பார்க்கவந்த ஜனங்களின் தொகை 60 இலட்சத்திற்கு அதிகமாம். அவர்கள் கொடுத்த பிரவேச வருத்தனை 50 இலட்சம் ரூபாயாயிற்று. இந்தத் தொகையில் மாளிகையைக் கட்டுவதற்குப் பிடித்த செலவும், சகல பொருட்காட்சிசாலையின் விசாரணைக்காரருக்கும், சேவகர் சிப்பந்திகளுக்கும் கொடுத்த சம்பளமும்போக, 15 இலட்சம் ரூபாய் மிகுதியாக இருந்தது. இந்தச் சகல பொருட்காட்சி சாலையை ஸ்தாபித்ததனால் பிரிட்டிஷ் இராச்சியத்திற்குண்டான

பிரயோசனத்தை மகா இராணியாரவர்களும், அவர்கள் நாயகரும் நன்கு உணர்ந்து, இதைவிட விசேஷமான சகல பொருட்காட்சி சாலையொன்றை 1862-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். இது நிறைவேறுகிறதற்குள்ளாக மகா இராணியாரவர்களுடைய குடும்பத்தில் விசனகரமான சில மாறுதல்கள் உண்டாயின.

வைதவ்விய தசை.

மகா இராணியாரவர்களுக்குப் பட்டாபிஷேகமானது முதல், அவர்களுடைய இராச்சியம் சிறந்தோங்கிப் பிரபலமடைந்துவந்ததுமல்லாமல், அவர்களுடைய குடும்பமும் நாளுக்குநாள் விருத்தியடைந்துகொண்டுவந்தது. அவர்களுடைய குமாரத்தியாகிய விக்டோரியா ஆடிலேயிட் மராயா லூயிஸா பிரின்ஸெஸ் ராயல் என்பவர்களுக்கு விவாகம் வெகு சம்பிரமமாய் நிறைவேறியது. ஆலிஸ் மாட் மேரி என்னும் ராஜபுத்திரியின் விவாகத்திற்காகவும், ஹிஸ் ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆப்வேல்ஸ் அவர்களுடைய விவாக மகோற்சவத்திற்காகவும் பல பிரயத்தனங்கள் நடந்துவந்தன. இவ்வாறு மகா இராணியாரவர்களுடைய குடும்பத்தில் சுபசோபனங்கள் முழங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில், 20 அல்லது 25 வருஷகாலமாய் சகல சம்பத்தையும் பெற்று யாதொரு குறைவுமில்லாமல் இன்புற்றிருந்த நமது காருணிய இராணியாரவர்களுக்குத் திடீரென்று, பகவானுடைய செயலினால், பெருந்துயரம்வந்து நேரிட்டது.

1861-ம் வருஷம் மார்ச்சுமீ 16உ மகா இராணியாரவர்களுடைய அருமைத்தாயாராகிய டச்செஸ் ஆப் கெண்ட் தேகவியோகமானார்கள். இறந்துபோன உத்தமி சாமான்னியமான தாயாரல்

ல,—தமது குமாரத்தியாகிய நமது காருண்ய இராணியாரவர்களுக்காகவே தமது சுதேசத்தையும், இனஞ் சனங்களையும் துறந்து, இங்கிலாண்டுதேசத்திற்குவந்து, தமக்குச் சிற்சில சங்கடங்கள் நேரிட்டபோதிலும் அவைகளை ஒரு பொருளாக மதிக்காமல், தங்கித்தரித்து, மகா இராணியாரவர்களை மிகுந்த கவலையோடும், திறமையோடும் வளர்த்தெடுத்து, பிரிட்டிஷ் இராச்சியத்திற்குப் பேருதவி செய்தவர்கள். இவர்கள் மகா இராணியாரவர்களின் நிமித்தம் பட்டப்பிரயாசங்களினால் பிரிட்டிஷ் குடிஜனங்களுக்கு உண்டாயிருக்கும் சௌக்கியத்தை இப்பொழுது நான் சொல்லிக்கொண்டுவந்த சரித்திர வரலாறுகளினாலேயே யூகித்தறியலாம். ஆகையால் இவர்கள் மரித்தபோது சமீபத்திலிருந்த மகா இராணியாரவர்களும், அவர்களுடைய நாயகரும், பிள்ளைகளும் அடைந்த துயரம் இவ்வளவவ்வளவல்ல. மகா இராணியாரவர்கள் பட்டத்திற்கு வந்தபிறகு அவர்களுக்கு முதல்முதல் நேரிட்ட இந்தத்துக்கத்தை அவர்கள் குடி ஜனங்கள் தங்கள் துக்கமாகப்பாவித்து வருத்தமுற்றிருந்தார்கள். இறந்துபோனச் சீமாட்டி கேட்டுக்கொண்ட பிரகாரமே, அவர்களுடைய பிரேதத்தை, இராசபத்தினிமார் இறக்கும்போது வழக்கமாய் நடக்கிற விமரிசைகளைப் பெரும்பான்மை யொழித்து, மார்ச்சுமீ 25வ, தகுதியான வேறொரு சமாதி ஆயத்தமாகும்வரையில், செண்ட் ஜார்ஜ்ஸ் தேவாலயத்தில் அடக்கஞ்செய்துவைத்தார்கள்.

இந்த உத்தமி பழுத்தபழம் என்று சொல்லத்தக்க நல்ல விருத்தாப்பிய பருவத்தையடைந்து இறந்துபோனார்கள். மகா இராணியாரவர்களுக்கும் இப்பொழுது தாயாருடைய உதவி அவ்வளவாய் வேண்டியதல்ல. ஆகையால், தாயார் இறந்துபோனதற்காக மகா இராணியாரவர்கள் மிகுந்த துக்கமடைந்திருந்தபோதிலும், அவர்களுடைய பிராணநாயகர் செய்யும் உபசாரங்களினாலும், ஆதரணையினாலும் இந்தத்துக்கம் நாளாவட்டத்தில்

ஆறிப்போகுமென்று நம்ப இடமுண்டாயிருந்தது. அப்படியே மகா இராணியாரவர்களுடைய துயரம் ஒருவாறு தணிந்துகொண்டுவருகிறசமயத்தில், மரணம் இந்தக் கொழுகொம்பையும் நிலைக்கவொட்டாமல் அகற்றிவிட்டது. கடந்த 22 வருஷகாலமாய், மகா இராணியாரவர்கள் உயிருக்குயிராக இருந்த அவர்களுடைய பிராணநாயகரும், அறிவுக்கெட்டாத தேவச்செயலினால், 1861 ம் வருஷத்திலேயே தேகவியோகமானாகள். பிடித்தகொம்பும் ஒடிந்து, மிதித்த கொம்பும் முறிந்தாற்போல, மகா இராணியாரவர்கள் மீளாத் துக்கசாகரத்தில் மூழ்கினார்கள். பிரிட்டிஷ் இராச்சியமெல்லாம் வருத்தமுற்றுப் பிரலாபித்தது.

ஹிஸ் ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆல்பெர்ட்டவர்கள் இங்கிலாண்டுதேசத்திற்குவந்ததுமுதல் இதுவரையில் ஒருநாளாவது நோய்என்று படுத்தறியார்கள். இப்பொழுது கண்டதும் ஆரம்பத்தில் சாதாரணமான ஜலதோஷம்போலக்காணப்பட்டது. ஆகையால், இவர்கள் இரண்டுவாரம் அசௌக்கியப்பட்டிருந்தபோதிலும், வியாதி இவ்வாறு முடியுமென்று ஒருவரும் நினைக்கவேயில்லை. இவர்கள் தேகவியோகமாவதற்கு நாலு ஐந்துநாள் இருக்கையில், வியாதி விஷஜுரமாக மாறி, அகோரமாய் அதிகரித்தது. இங்கிலாண்டுதேசத்தில் வைத்தியத்தில் சிறந்தவர்களாக விளங்கின பண்டிதர் நால்வர் மிகுந்த கவலையோடு தங்களாலான சிகிச்சைகள் செய்துகொண்டுவந்தார்கள். அவர்கள் என்னசெய்தும் வியாதி அதிகரித்துக்கொண்டேவந்தது. வைத்தியர்களில் ஒருவர் ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்களைப்பார்த்து, தாங்கள் இன்னும் இரண்டுமூன்று தினங்களுக்குள்ளாகச் சௌக்கியமடைவீர்கள் என்று சொன்னதைக்கேட்டு, இவர்கள் இந்த நோய் லகுவாகமாட்டாதென்று எனக்கு நன்றாய்த்தெரியும்; ஆகிலும் நான் பயப்படவில்லை என்று மறுமொழி உரைத்தார்கள். வைத்தியர் அப்பொழுது ஒன்றுஞ் சொல்லாமலிருந்து, சிறிதுநேரம் பொ

ருத்து திரும்பவும் வந்து, தாங்கள் சொன்னது நிறைவேறாமல் போகவேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன் என்று சொன்னதற்கு, இவர்கள் நான் சுவஸ்தமடைவேன் என்னும் நம்பிக்கை எனக்கு இல்லை. இவ்வுலகவாழ்க்கையில் பற்றுடையவனாகவாவது, மனுஷப்பிரயத்தனங்களில் நம்பிக்கையுடையவனாகவாவது இப்பொழுது இருப்பேனேயானால், மிகுந்த தௌர்ப்பாக்கியனாவேன். பரலோகவாழ்வில் பற்றுடையவனாய், பகவானது பாதாரவிந்தத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லி, ஆபத்துக்காலத்தில் அடியார் அண்டையில் நின்று, அஞ்சேல் என்று ஆதரிக்கும் எம்பெருமானாகிய கிறிஸ்துயேசு நாதனை இடைவிடாமல் தியானித்து, பலமுறை பிறர்கேட்கும்படியாகவும், தொனியெடுத்து, திருநாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டிருந்தார்கள். டிசம்பர் மீ 14 உ சனிவாரம் இராத்திரி 11 மணிக்கு வின்ட்



வின்ட்ஸர்மாளிகை—தெம்ஸ்நதி பக்கத்தில் காண்கிறபாவனை.

ஸர்மாளிகையைச்சேர்ந்த ராஜபள்ளியறையில், மகா இராணியாரவர்களும், இளவரசாகிய பிரின்ஸ் ஆப்வேல்ஸ் அவர்களும், பிரின்ஸெஸ் ஆலிஸ் பிரின்ஸெஸ் ஹெலீனா என்னும் ராஜபுத்திரி

களும், அரண்மனை உத்தியோகஸ்தரில் பலரும் சூழ்ந்து நின்று உபசரித்துக்கொண்டிருக்கையில், தமது ஊனுடம்பை நீத்து, இப்புவியில் புகழுடம்பை நாட்டி, தம்மை ஆட்கொண்ட அருள் நாதனது திருவடியிணையைப்பற்றிக்கொண்டு பொன்னகர்க்கு ஏகினார்கள். மகா இராணியாரவர்களும், பிள்ளைகளும் அடைந்த துயரம் சொல்லமுடியாது. எழுத அடங்காது. மகா இராணியாரவர்கள் தமது மக்கள் அதைரியப்படுவார்களே என்று தம்முடைய துக்கத்தை அடக்கிக்கொள்ளப் பிரயாசப்பட்டும், தாபத்திரிய மிகுதியினால் முடியாமல், இடைக்கிடை கதறிக்கதறி அழுதார்கள். பிள்ளைகளும் அலறி அலறி புலம்பினார்கள். இந்தப் புண்ணியபுருஷர் இறக்கும்போது விதித்தவண்ணமே, இவர்களுடைய தேகத்தை, ஆடம்பரங்கள் ஒன்றுமில்லாமல், வேறே தகுதியான சமாதி ஆயத்தமாகிறவரையில், விண்ட்ஸர் மாளிகையை அடுத்த தேவாலயத்தில், டிசம்பர்மீ 23உ திங்கட்கிழமை, அடக்கம்செய்தார்கள். இந்த உத்தர கிரியைக்குத் தொலைதூரங்களிலிருந்தும் அனேக கனவான்களும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். இது காரியத்திற்கு, தேகவியோகமான மகானுபாவருடைய சகோதரராகிய டியூக் ஆப் ஸாக்ஸ்கோபர்க் அவர்களும், பெரிய மருமகனான பிரஷ்ஷிய தேசத்து இளவரசும்வந்து மிகுந்த வருத்தமுற்றிருந்தார்கள். பிரேதம் சேமிக்கப்பட்டிருந்த பெட்டியைக் கல்லறைக்குள் இறக்கும் சமயத்தில், ஜேஷ்டபுத்திரராகிய பிரின்ஸ்ஆப் வேல்ஸ் அவர்களும், இளைய குமாரர்களில் ஒருவராகிய பிரின்ஸ் ஆர்த்தர் அவர்களும், மகா இராணியாரவர்கள் புனைந்து அனுப்பின வாடாத பூங்கொத்தையும், ராஜபுத்திரிகள்தைத்து அனுப்பின மாலைகளையும் அதன்மேல் வைத்து, கோவென்று கதறி அழுதார்கள். பிரின்ஸ் ஆர்த்தர் அழுததைப் பார்த்தவர்கள் சகிக்கமாட்டாமல் அழுதுவிட்டார்கள். மகா இராணியாரவர்களுடைய பிராணநாயகர் தேகவி

யோகமான செய்தி தெரிந்த உடனே, பிரிட்டிஷ் இராச்சி யத்திலுள்ள யாவரும் தங்கள்தங்கள் குடும்பத்திலேயே மரணம் நேரிட்டதுபோலத் துக்கக்கோலம்கொண்டு, "தேவன் எங்கள் இராணியாரை இத்தருணத்தில் தாங்கி ஆற்றித்தேற்றி ஆளக்கடவர். பிதாவை இழந்து தவிக்கிற பிள்ளைகளுக்குத் தேவனே பிதாவாயிருக்கக்கடவர்" என்று பிரார்த்தித்து வருத்தமுற்று, "மகா இராணியாரவர்களுக்கு நேரிட்ட இந்த விபத்து நம்மால் ஒழியக்கூடுமானால், அதனை ஒழிக்க என்னதான் செய்திருக்கமாட்டோம். நம்முடைய அன்பும் விசுவாசமும் அவர்களுக்கு இந்த ஆபத்துவேளையில் உதவி, ஆறுதல் செய்கிறதாயிருந்தால் இன்னும் எவ்வளவு வணக்கமாயும் அன்பாயும் நடந்துகொள்ள மாட்டோம். ஐயையோ! இந்த விபத்து நம்மால் ஒழிகிறதல்லவே என்னசெய்வோம். நம்முடைய காருணிய இராணியாரவர்களை தேவனே இரக்ஷிக்கக்கடவர்" என்று ஜெபம் செய்தார்கள். இவர்கள் இதற்கு முன் இறந்துபோன இராசாக்கள் ஒருவருக்காகவாவது, இப்படி வருத்தப்பட்டுப் புலம்பினதில்லை. பிரான்சியரும் தங்கள் கோட்டைகொடிமரங்களிலிருந்து கொடிகளைத்தாழ்த்தி, பிரிட்டிஷ் ஜனங்களோடுதுக்கம் கொண்டாடினார்கள். இவர்களும் இப்படி முன் ஒருவருக்கும் செய்ததில்லை. மற்றத் தேசத்தாரும் பிரிட்டிஷ் இராச்சியம் அடைந்த நஷ்டத்திற்காகப் பரிதாபப் பட்டார்கள்.

1862 ம் ௵ பெப்ருவரி௴ பார்லமென்ட் சபையார் கூடினபோது, ஹிஸ்ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆல்பெர்ட்டவர்களுடைய குணாதிசயங்களைப் பலவாறு சிலாக்கியப்படுத்திப் புகழ்ந்து பேசினதுமல்லாமல், மகா இராணியாரவர்களுக்கும், பிரிட்டிஷ் இராச்சியத்திற்கும் நேரிட்ட மீளாத துன்பத்தை யுணர்ந்தவர்களாய், இராச்சிய பரிபாலன விஷயங்களில் தள்ளிவைக்கக் கூடியவற்றைத் தள்ளிவைக்கவும், அவசரமானவற்றை அமைதி

யாய் யோசித்து முடிவுசெய்யவும் தீர்மானித்தார்கள். பிரிட்டிஷ் பிரபுக்களும், சாதாரண குடி ஜனங்களும் தமக்குப் பேருபகாரியாகவிருந்த ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்களைத் தமக்கும் தமது சந்ததியாருக்கும் நினைப்பூட்டத்தக்க ஞாபகஸ்தாபன மண்டபமொன்றைக் கட்டுவிக்கவேண்டுமென்று நிருணயித்து, 5 இலட்சம் ரூபாய் சேகரித்தார்கள். இந்தப்பெருந்தொகையைக்கொண்டு முன் 1851-ம் ௵ ஹைட்பார்க்கில் ஸ்தாபிக்கப்பட்ட சகல பொருட்காட்சி சாலை யிருந்தவிடத்தில், ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்கள் பரிபாலித்துக்கொண்டு வந்த ககோளசாஸ்திரம், பூகோளசாஸ்திரம், பூதசம்பவக்கியானம், அளவு நூல், ஜீவாங்க சாஸ்திரம், வாகடம், இரசவாதநூல், கலைஞானசாஸ்திரம், அலங்காரசாஸ்திரம், வேளாண்மை, வாணிகம், கைத்தொழில், இயந்திர சூத்திரம், ஒழுக்கநூல், பக்திநூல் முதலிய பற்பல கல்வித்துறைகளை உணர்த்தத்தக்கதாக சித்திரக்கூடம் ஒன்றை வெகு அலங்காரமாய் இயற்றி, அதன் நடுவில், ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்களுடைய பிரதிமை ஒன்று $13\frac{1}{2}$அடி உயரமுள்ளதாயும், உட்காந்திருக்கிற பாவனையாயும், ஒருவகையான வெண்கலத்தினல் செய்து ஸ்தாபித்தார்கள். இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, அயர்லாண்டு தேசங்களிலுள்ள பிரதானமான நகரங்களிலும் ஜனங்கள் ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்களுடைய ஞாபகஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

மகா இராணியாரவர்களுக்கு இந்தப்பெரும் விபத்துவந்து நேர்ந்தபிறகும், அவர்கள் ராஜகாரியங்களில் தாமே இருந்து அகத்தியம் நடப்பிக்கவேண்டியவைகளைமாத்திரம் முன்போலவே மிகுந்த ஜாக்கிரதையோடு செய்து நிறைவேற்றிக்கொண்டு வந்தபோதிலும், மந்திரிமார்களே பார்த்துக்கொள்ளக் கூடியவற்றை அவர்கள் வசத்தில்விட்டு, கொலுமண்டபம் முதலான பிரசித்தமான இடங்களுக்கும் போகாமல், அந்தப்புரத்தில்தா

னே பெரும்பாலும் இருந்து, யார் எவ்வளவு ஆறுதல் சொன்னபோதிலும், மனோவேதனை சிறிதும் தணியாமல், தமது பிராணநாயகரோடு தமது போகபோக்கியங்களும், இல்வாழ்க்கையின் இன்பங்களும் போய்விட்டதாகப் பாவித்து, முன்போலச் சீராக உண்டு உடுக்கவும் இணங்காமல், தமது கண்மணியான பிராணநாயகரை நினைந்து நினைந்து உள்ளம் உருகி மெலிந்து, சோகம் என்னும் கடலில் மூழ்கி, வருத்தமுற்றிருந்தார்கள்.

மகா இராணியாரவர்கள் அனுமதியின்படி 1862-ம் ஸ்ரீ லண்டன் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சகல பொருட்காட்சி சாலைக்கிரகப் பிரவேசத்திற்கும் தாம் போகவில்லை. தாமும், தமது பிராணநாயகரும் நிருணயித்திருந்தபடியே, தமது குமாரத்தியாகிய பிரின்ஸெஸ் ஆலிஸ் என்பவருக்கு விவாகமானபோதும், வெளியில் எங்கும் புறப்படாமல், அந்தப்புரத்தில்தானே இருந்தார்கள். இந்த விவாகமும் சந்தடியில்லாமல் வெகு அடக்கமாய், 1862-ம் ஸ்ரீ சூலைமீ 1உ, நிறைவேறியது.

மகா இராணியாரவர்களுக்குத் தமது பிராணநாயகரிடத்தில் உண்டாயிருந்த பக்தியின் மிகுதியினால் ஹிஸ்ராயல் ஹைனெஸ் அர்களுடைய சேவகர் சிப்பந்திகளில் ஒருவரையும் தள்ளிவிடாமல், அவர்கள் எஜமானர் ஜீவதசையிலிருந்தாலெப்படியோ, அப்படியே யாவருக்கும் சம்பளம் படி முதலானவைகளைக் குறைவின்றிக் கொடுத்து நடப்பிக்கும்படியாகத் தமது பொக்கிஷக்காரருக்குக் கட்டளையிட்டார்கள்.

ஆஸ்பரன், பால்மோரல் என்னும் தமது மாளிகைகளில் முன் தாமும் தமது பிராணநாயகரும்போய் வாசஞ்செய்யும்போது, அந்த மாளிகைகளைச்சேர்ந்த வனங்களில் வேடிக்கையார்த்தமாக இருவரும் உலாவிக்கொண்டுபோவார்கள். அந்த வனங்களில்

உள்ள குயிலையொத்த பட்சி இனங்கள் இசைபாடுவதைத் தமது பிராணநாயகர் கேட்டு ஆனந்தமுற்று வெகு இனிப்பாக ஈசை கொட்டிக்கொண்டு வருவது வழக்கம். மகா இராணியாரவர்கள் இப்பொழுது தனிமையாய் அந்த வனங்களில் உலாவிக்கொண்டு போகையில், தமது பிராணநாயகர் இப்பொழுதுதான் அண்டையிலிருந்து இசைபாடுகிறதுபோல அவர்களுடைய இனிய ஓசை தமது செவிகளில்ஒலிக்கிறது என்று சொல்லி துயரமுறுவார்கள்.

மகா இராணியாரவர்கள் நானாதேசங்களிலிருந்து பலவிதமான கல் முதலிய சாமான்களை யழைப்பித்து, ஒதுக்கிடமானதும், தோப்புத் தோட்டங்களினாலும், தடாகங்களினாலும் சிறந்ததுமாகிய பிராக்மோர் என்னுமிடத்தில், 80 அடி நீளமும், 70 அடி அகலமும், 83 அடி உயரமும் உள்ள அலங்காரச் சமாதியொன்றைக் கட்டுவித்தார்கள். அதனடுவில் இருவரை அடக்கஞ்செய்வதற்கேற்ற கல்லறையை நான்கு காந்தருவர் முழந்தாள் படியிட்டு ஏந்திக்கொண்டிருக்கிற பாவனையாகச் செய்து, அதன்மேலே தமது பிராணநாயகர் படுத்திருக்கிற பாவனையாக உயர்ந்தசலவைக்கல்லினால் ஒரு சித்திரப் பதுமையையும் செய்துவைத்தார்கள். இந்தச் சமாதிகட்டி முடிந்தவுடனே மகா இராணியாரவர்கள் விண்ட்ஸரில் வைத்திருந்த தமது பிராணநாயகருடைய பிரேதப் பெட்டியை எடுப்பித்துக்கொண்டுவந்து, 1862-ம் ௵ டிசம்பர்மீ 17வ சேமித்து, தாம் இறந்துபோனால் தம்மையும் இந்தச் சமாதியில்தானே அடக்கஞ்செய்து, தாம் படுத்திருக்கிற பாவனையாகப் பிரதிமையொன்றைச்செய்து, தங்கணவரண்டையில் வைக்கவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். மகா இராணியாரவர்கள் அடிக்கடித் தனிமையாய் இந்தச் சமாதிக்குப் போய்வருகிறதுமல்லாமல், வருஷத்திற்கொருமுறை குடும்ப சமேதராயும்போய்த் தாமும் தமது குமாரத்திகளும் அன்பின் அடையாளங்களாகத் தொடுத்துக்கொண்டுபோகிற வாடாத புஷ்ப

மாலைகளையும், கொத்துகளையும் சமாதியின்மேல்வைத்துவிட்டு வருகிறார்கள்.

இங்கிலாண்டுக்குத் தெற்கிலுள்ள ஐல் ஆப் ஒயிட் என்னும் தீவில் மகா இராணியாரவர்களுக்கு ஆஸ்பர்ன் என்று சொல்லப் படுகிற மாளிகை யொன்றுண்டு. மகா இராணியாரவர்களும், அவர்கள் பிராணநாயகரும் இந்த மாளிகையில்போய் வாசஞ் செய்யும்போதெல்லாம், இதற்குச் சமீபத்திலிருக்கிற விப்பிங் ஹாம் என்னும் தேவாலயத்திற்குத் தவறாமல்போய், தேவனை ஆராதித்துக்கொண்டுவருவார்கள். இந்த ஆலயம் புராதனமானதால், மிகவும் கிலமாய் இருந்தது. ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்கள் இறந்துபோகச் சில மாதங்களிருக்கையில் இதனை முற்றிலும் இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டிவைத்தார்கள். மகா இராணியாரவர்கள் இப்பொழுது இந்த ஆலயத்திலும், ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்கள் ஞாபகம் இருக்கும்படியாக நினைவு குறிப்பு ஒன்று செய்துவைக்கவேண்டுமென்று உத்தேசித்து, ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்களுக்கு விண்ணோர் நட்சத்திரமுடி சூட்டுகிற பாவனையாகச் சலவைக்கல்லில் சித்திரித்து, அதனடியில் "இஃது 1861-ம் ௵ டிசம்பர்மீ 14 ௳ தேக வியோகமான பிரான்ஸிஸ் ஆல்பெர்ட் சார்ல்ஸ் அகஸ்டஸ் இம்மான்யு அல், பிரின்ஸ் கான்ஸர்ட் அவர்கள் நினைவுகுறிப்பாக, மனத்துயருற்று வருந்துகின்ற அவர்கள் பத்தினியாகிய விக்டோரியா இராணியினால் செய்யப்பட்டது" என்று சிலாஸாஸனம் ஏற்படுத்தி விப்பிங்ஹாம் ஆலயத்தில் நாட்டினார்கள். இவ்வாறே விண்ட்ஸர்மாளிகையை யடுத்த இராச கல்லறையினிடத்தும், ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்கள் ஞாபகார்த்தமாய்ச் சில குறிப்புகளை ஏற்படுத்தினார்கள். ஹிஸ்ராயல் ஹைனெஸ் அவர்களுடைய சரித்திர சம்பந்தமாகவும், அவர்கள் கைப்பற்றி இருந்த வேத சம்பந்தமாகவும், பல உசிதமான சித்திரப் பதுமைகளைச்

செய்வித்து, இந்தக் கல்லறைக்குமேல் உபயோகத்திற்கு வராம லிருந்த ஆலயத்தில் வைத்து, அதனை அலங்காரச்சித்திர மண் டபமாக்கினார்கள். மகா இராணியாரவர்கள் இந்த மண்டபத் தை அலங்கரித்துக்கொண்டுவருகையில்; அவர்களுடைய குமா ரர்களும், குமாரத்திகளும் தனித்தனி ஒவ்வொரு சித்திரப்பது மையைச் செய்வித்துக்கொண்டுவந்து இராணியாரவர்களிடத் தில் கொடுத்து, தங்கள் பிதாவின் ஞாபகார்த்தமாய் இந்த மண் டபத்தில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மகா இராணியாரவர்கள் தமது பிராணநாயகர் தேகவியோகமானபி றகு அவருக்கு இத்தன்மையான பல உத்தரகிரியைகளைச் செய்து கொண்டு இரண்டு வருஷகாலம் அந்தப்புரத்தில்தானே பெரும் பாலும் இருந்து, தமது துயரத்தை ஒருவாறு தணித்துக்கொள் ளப் பிரயத்தப்பட்டுக்கொண்டு வந்தார்கள்.

மகா இராணியாரவர்களும் அவர்கள் பிராண நாயகரும் இர ண்டுவருஷங்களுக்குமுன் உத்தேசித்திருந்த வண்ணம் தமது பட்டத்துக் குமாரரும் வேல்ஸ் நாட்டு இளவரசுமாகிய ஹிஸ்ரா யல் ஹைனெஸ் ஆல்பெர்ட் எட்வர்ட் அவர்களுக்கு விவாகமா காமல், தேவச்செயலினால் தடைபட்டிருந்தது. இனி கால தாமசமின்றி இதனை நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று மந்திரி பிரதானிகள் ஆலோசனை சொல்ல, மகா இராணியாரவர்கள் அவர்கள் கருத்துக்கிணங்கி, தமது துக்கத்தைச் சிறிது மறந்து, 1863 - ம் ஷ மார்ச்சுமீ 10உ தமது குமாரருடைய விவாக மகோற்சவத்தை வெகு சிறப்பாக நடத்தி, தம்பதிகளை வாழ்த்தி ஆசிர்வதித்து, முன்போலவே அந்தப்புரத்தை யடைந்து, துக் கக்கோலம் கொண்டிருந்தார்கள்.

பிரிட்டிஷ் குடிஜனங்கள் தங்கள் மகா இராணியாரவர்கள் இப் படித் தீராச் சஞ்சலமுற்று, துக்க சாகரத்தில் மூழ்கி, கொலுமண் டபம் முதலான இடங்களுக்கு வந்து தரிசனையும் அளிக்கவில்லை

பே என்று தாய்முகங்காணாத பிள்ளைகளைப்போல் ஏக்கமுற்று வருந்துகிறார்கள் என்று மகா இராணியாரவர்கள் அறிந்துகொண்டு, இன்னொருதரம் அந்தப்புரத்தைவிட்டுப் பயிரங்கமாய்க் கொலுமண்டபத்திற்குப்போக இசைந்தார்கள். அதற்குத் தகுதியானசமயமும் வாய்த்தது. 1866 - ம் ஹு பெப்ருவரிமீ 6 உ பார்லமென்ட் என்னும் மகா சபையைப் புதிதாகக் கூட்டவேண்டிவந்தது. மகா இராணியாரவர்களே கொலுமண்டபத்திற்கு வந்திருந்து, சபைகூட்டி வைக்கப்போகிறார்களென்று தெரிந்தவுடனே, ஜனங்கள் வெகு சந்தோஷமுற்று, இராணியாரவர்களுடைய முகதரிசனம் செய்யவேண்டுமென்னும் ஆபேக்ஷையோடு, பக்கிங்ஹாம் மாளிகையிலிருந்து கொலுமண்டபத்திற்குப்போகும் மார்கத்தில் நெக்கரித்துக்கொண்டு நின்றார்கள். மகா இராணியாரவர்கள் தமது அந்தஸ்திற்குரிய ஆடம்பரங்களொன்றுமில்லாமல், துக்கக்கோலத்தோடு, தமது பிராணநாயகருடைய படம் பதிந்திருந்த பதக்கம் ஒன்றை யணிந்துகொண்டு வருகிறதை ஜனங்கள் பார்த்தவுடனே, அந்தப்பரிதாபத்தைப் பார்க்கச் சகிக்கமாட்டாமல், அசந்து தலை சாய்த்துக்கொண்டு மரம்போல் நின்றுவிட்டார்கள். மகா இராணியாரவர்களைக் கண்டமாத்திரத்தில் முன்போல ஆர்ப்பரிக்காவிட்டாலும், தமது துக்கத்தை அவர்கள் துக்கமாகப் பாவித்துக்கொண்டு வருத்தப்படுகிற ஜனங்களை ஆதரிக்கும்பொருட்டு மகா இராணியாரவர்கள் கிருபாநோக்கு அளித்துக்கொண்டே கொலுமண்டபம்போய்ச் சேர்ந்தார்கள். தமது வருகையைக்கண்டு எழுந்து வணங்கி நின்ற கனவான்களையும், பிரபுக்களையும் அவரவர்கள் ஆசனத்தில் இருத்தி, தமது மந்திரிமார்களில் ஒருவரைக்கொண்டு கூட்டத்தின் காரியங்களை நடத்தினார்கள். மகா இராணியாரவர்கள் தமது சிங்காசனத்தின்மீதுவந்து உட்கார்ந்ததுமுதல் கூட்டம் கலைகிற பரியந்தம் குனிந்த தலையை யேறெடுக்காமல் வருத்தமுற்றிருந்ததைப் பார்த்தவர்க

ள் யாவரும் மனங்கலங்கி நின்றார்கள். கூட்டத்தின்முடிவில் மகா இராணியாரவர்கள் எழுந்து விடைபெற்றுக்கொண்டு, கூட்

ஹிஸ்ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆப் வேல்ஸ்.

டத்திற்கு வந்திருந்த தமது குமாரராகிய பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவர்களையும், தமது மருமகளாகிய பிரின்ஸெஸ் ஆப் வேல்ஸ்

அவர்களையும் அணைத்து முத்தமிட்டு, அவர்களை அவர்களிருப் பிடத்திற்கனுப்பிவிட்டு, தமது அரண்மனைபோய்ச் சேர்ந் தார்கள்.

ஹிஸ்ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆப்வேல்ஸ் அவர்களுக்குப் பிள்ளை பிறந்து புத்திரோற்சவம் கொண்டாடுகையில், மகா இ ராணியாரவர்கள் தமது பிராண நாயகரைப்போலச் சித்திரப்பது மை யொன்று வெள்ளியினால் செய்வித்து, அதில் அவர் குணாதி சயங்களை விளக்கத்தக்க சில வாக்கியங்களையும் பதிவித்து, "மா ட்சிமை பொருந்திய உன் பாட்டனாரைப்போல நீ நடக்க முயலு வாயாக" என்னும் வாக்கியம் தோன்றும்படியாகவும் செய்து, தமது பேரப்பிள்ளைக்குக் கொடுத்தார்கள்.

இதைப்போன்ற சுபகாரியங்கள் நாலைந்து ஹிஸ்ராயல் ஹைனெ ஸ்பிரின்ஸ்கான்ஸர்ட் அவர்கள் இறந்துபோனபிறகு மகா இராணி யாரவர்களுடைய குடும்பத்தில் நடந்தபோதிலும்,அவர்களுடைய பெருந்துயரம் தணியவேயில்லை. இந்த மனோவியாகுலத்தினால் ம கா இராணியாரவர்களுக்குச் சௌக்கியத் தாழ்ச்சி யுண்டாயிற்று. இந்தச்செய்தி ஜனங்களுக்கு எட்டின உடனே அவர்கள் மிகுந்த சஞ்சலமுற்றிருந்தார்கள். மகா இராணியாரவர்களுக்குத் தேகம் சிறிது சௌக்கியமடைந்துவரும்போது அவர்களுக்கு இன் னொரு பெரும் விபத்து நேரிடுகிறதாக இருந்தது. 1871-ம் ஹூ டிசம்பர்மீ மகா இராணியாரவர்களுடைய ஜேஷ்டபுத்திரராகிய பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவர்களுக்கு அவர்கள் பிதாவுக்குக் கண்ட விஷஜுரமேகண்டு இனியேதென்றுபோய்விட்டது.அந்தச்சமயத் தில் மகா இராணியாரவர்கள் நடந்துகொண்டவிதத்தை முன்னொ ரு சந்தர்ப்பத்தில் உரைத்திருக்கிறேன். தேவானுக்கிரகத்தினால் ராஜகுமாரருக்கு ஜுரம் ஒருவாறு சௌக்கியமான உடனே மகா இராணியாரவர்கள் தமது குடிஜனங்களுக்கு ஒரு திருமுகத்தைக் கட்டளையிட்டு "எனது குடும்பத்திற்கும் இராச்சியத்திற்கும் பெ

456, 17.7.1909

N78

ரும் விபத்து நேரிடுகிறதாக இருந்தபோது, எனது குடிஜனங்ள் பாராட்டின அன்பையும் ராஜவிசுவாசத்தையும் நான் ஒரு பொழுதும் மறக்கவேமாட்டேன். அவர்கள் நான் வருத்தப் படும்போது இவ்வாறு வருத்தப்பட்டது எனக்கு நூதனமான காரியமல்ல. பத்துவருஷங்களுக்குமுன்னே இதே வியாதியி னல் என் பிராணநாயகர் தேகவியோகமானபோதும் அவர்கள் எனக்காக இப்படியே வருத்தப்பட்டார்கள். இன்னும் அவர் கள் என் செல்வப்புத்திரன் முழுமையும் சுவஸ்தமடைந்து எழுந் திருக்கும்படியாகத் தேவன் கட்டளையிடவேண்டுமென்று பிரார்த் திப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன், என்று அறி வித்தார்கள். அப்படியே பிரிட்டிஷ் இராச்சியத்தில் எங்கும் தேவாராதனைகள் நடந்து ராஜகுமாரருக்காகப் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. தேவனும் மிகவும் இரக்கமாய் இந்தப் பிரார்த் தனைகளைக் கேட்டருளினர். ஹிஸ்ராயல் ஹைனெஸ் பிரின்ஸ் ஆப்வேல்ஸ் அவர்கள் முழுமையும் சுவஸ்தமடைந்து எழுந்தார் கள். மகா இராணியாரவர்களும் இப்பொழுது க்ஷேமமாயிருக்கி ருர்கள். இனி இவர்களுக்கு யாதொரு துன்பமும் நேரிடாதப டிக்குப் பாதுகாத்து, இவர்கள் இன்னும் நெடுநாள் அரசுபுரி யும்படியாகச் செய்தருளவேண்டுமென்று கடவுளை நாம் பிரார்த் திக்கவேண்டுமல்லவா.

2253

முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ______
EGMORE, MADRAS-600 008